நமது ஈழநாடு
www.namathueelanadu.com



குரல் 04 மலர் 40 ஒக்டோபர் 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com

Simply Scan the QR code Your Phone Camera
Download the NamathuEelanadu app



*சமாதானத்தை நான் ஆத்மபூர்வமாக விரும்புகிறேன். எனது மக்கள் நிம்மதியாக சமாதானமாக கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எனது ஆன்மீக இலட்சியம்*

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களுக்கு நீதி எப்போது?

**தாயகன்**

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லை பகுதியாகவுள்ள மயிலத்தமடு மாதவனை பகுதியானது, நான்கைந்து தலைமுறைகளாக மேய்ச்சல் தரையாக காணப்படுகின்றமை வரலாறாகும். இங்குள்ள தமிழ் பாற்பண்ணையாளர்களிடம் 175,855 எருமைகள் மற்றும் 324,145 பசுக்கள் உட்பட சுமார் 500,000 கால்நடைகள் உள்ளன.

2012 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, அரச ஆதரவோடு சிங்கள குடியேற்ற வாசிகளால் 6948கால்நடைகள் கொல்லப்பட்டும், காயமடைந்தும், காணாமல் ஆக்கப்பட்டும் , அல்லது வலுக்கட்டாயமாக கைப்பற்றப்பட்டும், உள்ளன.

ஒருநாளைக்கு அண்ணளவாக 5000 லீற்றர் பாலினை இவர்கள் உற்பத்தி செய்கிறார்கள் அண்ணளவாக 3000பேர் இந்த பாற்பண்ணை தொழிலால் இப்பகுதியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் வாழ்வாதரத்தை கொண்டு நடாத்துகிறார்கள்.

இப்பண்ணையாளர்களின் கால்நடை வளர்ப்பு தொழிலானது பாரம்பரியமாக அப்பகுதியை மையப்படுத்தி அவர்கள் முன்னெடுத்து வரும் பூர்வீகத்தொழிலாகும். இத்தகைய மக்களின் வாழ்வாதாரத்தினை அடியோடு அகற்றுவதற்கான நடடிவடிக்கைகள் அரசாங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புச் சக்திகளான பௌத்த தேரர்களும், தொல்பொருள் திணைக்களமும், மகாவலி அதிகாரசபையும், பொலிஸாரும் கூட்டிணைந்து மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களை ஆக்கிரமித்து குடியேற்றங்கள் அமைக்கும் முயற்சிகள் தீவிரமாக்கப்பட்டன. இதற்கான தலைமையை கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்லத் வகித்திருந்தார்.

மேய்ச்சல் நிலங்களை விட்டு தமிழ் பண்ணையாளர்களை வெளியேற்றுவதை இலக்காகக் கொண்டு அவர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. பண்ணையாளர்களின் பல நூற்றுக்கணக்கான மாடுகள் சுட்டும் வெட்டியும் மின்சாரம் பாய்ச்சியும் கொல்லப்பட்டுள்ளன. கடத்தப்பட்டுள்ளன காணாமல் ஆக்கப்பட்டுள்ளன பண்ணையாளர்கள் பலருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு செய்தும் எந்த பலனும் இல்லை இந்த ஆக்கிரமிப்பு முயற்சி தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சட்ட விரோத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்படவேண்டும் எனவும் குடியேற்ற வாசிகள் அனைவரும் வெளியேற வேண்டும் எனவும் ஏற்கனவே நீதிமன்று கட்டளை வழங்கியுள்ளது.

இருந்தபோதிலும் அந்த நீதிமன்ற தீர்ப்பையும் மீறி தொடர்ந்தும் பண்ணையாளர்களின் வசமுள்ள மேய்ச்சல் நிலங்கள் தீ வைத்து அழிக்கப்பட்டு சிங்கள குடியேற்றவாசிகள் ஆக்கிரமிப்பை மேற்கொண்டனர். அத்துடன் தமக்கான கொட்டில்களை அமைப்பதோடு, காடுகளை அழிக்கும் செயற்பாட்டையும் ஒருங்கே புத்தரை நிறுத்தி நிரந்தரமான விகாரையொன்றை அமைப்பதற்கான செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியில் நாடு மோசமான நிலையில் உள்ளது சரிந்து போன நாட்டை நிமிர்த்த போகிறோம் உற்பத்தி துறையை தூக்கி நிறுத்தப் போகிறோம் என்று கூறி உலகத்திடம் சிறிலங்கா அரசாங்கம் பிச்சை எடுத்து கொண்டே தங்கள் வாழ்வாதாரம் மூலம் தங்கள் சொந்தக்காலில் நிற்பதோடு மட்டுமல்லாமல் இந்த நாட்டின் பஞ்சம் போக்கவும் உழைக்கும் மயிலத்தமடு தமிழ் பண்ணையாளர்களின் கால்நடைகளை கொல்லவும் அவர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கவும் சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு ஆதரவு வழங்கும்



நிலையே யதார்த்தமாக உள்ளது.

தமிழர் நிலங்களை அழிக்க வேண்டும் அந்த மண்ணை ஆக்கிரமித்து சிங்கள பௌத்த மயமாக்கவேண்டும் என்ற சிங்கள பேரினவாத கடும்போக்கு நிலையே மயிலத்த மடு மாதவனை பிரதேசம் மீது மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பின் நோக்கமாகும். பசுக்களை கொல்லக்கூடாது என்று பௌத்த தர்மம் சொல்கிறது ஆனால் அந்த புனித பௌத்த தர்மத்தை பின்பற்றும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் தமிழர்களுடையை சொத்து என்ற ஒரே காரணத்துக்காக வாய் பேசமுடியாத அந்த ஜீவன்களையும் விட்டு வைக்காது சுட்டும் வெட்டியும் கொன்று தமது இனவெறியை தீர்க்கும் உக்கிரம நிலைமைகள் தீவிரமாகியுள்ளன.

இதன் காரணமாக, பண்ணையாளர்கள் தமக்கான வாழ்வியலை நிலைநிறுத்துவதற்கான போராட்டத்தினை சுமார் ஒருமாதத்திற்கும் மேலாக மட்டக்களப்பு சித்தாண்டியில் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். அதுமட்மன்றி இறுதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாடசாலை நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக மட்டக்களப்புக்குச் சென்றிருந்த போது பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தினையும் முன்னெடுத்திருந்தனர்.

பிச்சைப்பாத்திரங்களை ஏந்தி தமது நிலைமைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கு வெளிப்படுத்தியிருந்தனர். ஆனாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவினர் போராட்டப்பகுதியை தவிர்த்து மறைந்து சென்றிருந்ததோடு பொலிஸார், அதிரடிப்படையினரைக் கொண்டு போராட்டத்தின் மீது அடக்கு முறையையும் பிரயோகித்திருந்தார்.

எனினும், பண்ணையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளை ஒப்புக்காக செங்கலடி மத்திய மாகாவித்தியாலத்தில் சந்தித்த ஜனாதிபதி அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி அதற்கான தீர்வினை பெற்றுத்தருவதாக கூறினார். அதற்கு அமைவாக, கடந்த 15ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஒரு கூட்டத்தினையும் கூட்டியிருந்தார்.

அதன்போது, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதி செயலாளர், ஆளுங்கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், காவல்துறைமா அதிபர் மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பு என்பன இந்த நாட்டின் முதுகெலும்பாகும் என்பதுடன், இவை இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து மட்டக்களப்பு மயிலத்தமடுவில் விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களிலேயே விவசாயம் மேற்கொள்ள மாற்று இட ஒதுக்கீடுகள் வழங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இவ்வாறு மாற்று இடங்கள் வழங்குவதன் ஊடாக பண்ணையாளர்கள்,



விவசாயிகள் என இருத்தரப்பினரின் பிரச்சினைகளும் முடிவுக்கு வரும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் பண்ணையாளர்களின் பிரச்சினைகள் முடிவுக்கு வரும் வரை கால்நடைகளுக்கு உணவுகளை வழங்க தேவையான உதவி தொகைகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறான பணிப்புரையை வழங்கிவிட்டு சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார். ஆனால் அவருடைய பணிப்புரையின் கீழ் எவ்விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதே கள யதார்த்தமாக உள்ளது. வெறுமனே பொலிஸ் குழுவொன்று விஜயம் செய்வது, நிலைமைகளை அவதானித்து அறிக்கையிடுவதும் தீர்வு அல்ல.

மயிலத்தமடு மாதவனை கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்களுக்குச் சொந்தமான, மேய்ச்சல் தரையில், அம்பாறை மாவட்டத்தின் தெகியத்தகண்டிய பிரதேசத்தில் இருந்து வந்த பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினர் 106 குடும்பங்களுக்கு தலா 5 ஏக்கர் காணி வீதம் விவசாய செய்கைக்குத் தரவேண்டும் என்றும் தாங்கள் இந்த இடத்தை விட்டு வெளியேற மாட்டோம் என்றும் தற்போதும் உறுதியாகக் கூறிக்கொண்டுள்ளனர்.

இதனால், கால்நடைகளை மேய்க்கும் மேய்ச்சல் தரைப் பகுதியில் விவசாயம் செய்தால் அதை கால்நடைகள் சென்று சாப்பிடும் போது பண்ணையாளர்களுக்கும், சிங்கள ஆக்கிரமிப்பு குடியேற்ற வாசிகளுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படும் இதனால் தமிழ், சிங்கள இன முரண்பாடுகள் ஏற்படக்கூடிய அதியுச்ச உணர்வு ரீதியான நிலைமைகளே காணப்படுகின்றன.

மயிலத்தமடு, மாதவனை ஆகிய பிரதேசங்கள் கால்நடைப் பண்ணையாளர்கள் மேச்சல்தரைக்காக காலாகாலமாக பயன்படுத்தி வருகின்ற ஒரு பகுதியாகும். அதனுள் தமிழர்களின் பூர்வீக நிலங்கள், வழிபாட்டுத் தலங்கள், மேய்ச்சல் தரைப் பகுதி என்பன அவற்றுள் அடங்குகின்றன.

ஆனால் காணி அபகரிப்புகளில் ஈடுபடுபவர்களால் அங்குள்ள பண்ணையாளர்களை அச்சுறுத்துவது, மிரட்டுவது, கால்நடைகளைச் சுடுவது போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன. இதற்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத்துக்கே உள்ளது.

ஆனால் அரசாங்கம் அந்தக் கடமையிலிருந்து விலகுகின்றபோது, அதனை நிறைவேற்றுவது யார்? மாதவனை மயிலத்தமடு பகுதி அதிகமான பண்ணையாளர்கள் கால்நடைகளை மேய்ப்பதற்காகவும் தங்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்காகவும் ஒதுக்கப்பட்ட பகுதி என்பதற்கு அப்பால் தமிழ் மக்களின் பூர்வீகப்பகுதியும் கூடவாகும்.

தமது பாட்டன், பூட்டன் காலத்திலிருந்து தற்போது வரைக்கும், தமது வாழ்வாதாரத்திற்காகவும், கால்நடை வளர்ப்புக்காகவும், விவசாயத்திற்காகவும், குடியிருப்புகளுக்காகவும், அமைந்துள்ள நிலத்தை அரசியல் அதிகாரத்தின் திணிப்பின் பெயரில் கையகப்படுத்தும் செயற்பாடுகளையும், குறித்த நிலப்பரப்புகளை அரச சொத்துக்கள் என்ற போர்வையில் கையகப்படுத்தி வேறு மாவட்டத்தினருக்குப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளையும், கட்சி பேதங்களைக் இன,மத பேதங்களை மறந்து தடுப்பதே பாரிய கடமையாகும். ஏற்கனவே திருகோணமலை, அம்பாறை போன்ற பகுதிகளில் தமிழர்கள் பூர்வீகங்களை இழந்துள்ள நிலையில் மட்டக்களப்பிலும் அந்நிலை ஏற்படுவதற்கு இடமளிக்க கூடாது.




# ஸ்ரீலங்காவின் நீதித்துறைதான் ஈழ இனப்படுகொலைக்குக் காவல்

ஸ்ரீலங்கா அரசின் நீதித்துறையின் கொடூர முகத்தை முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா உலகத்திற்கு எடுத்தியம்பியுள்ளார்.

ஸ்ரீலங்கா அரசின் நீதித்துறை என்பது ஈழத் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அழிப்பதையே முழு நேர வேலையாக கொண்டுள்ளது என்பதை ஈழத் தமிழ் மக்கள் கடந்த காலத்தில் சுட்டிக்காட்டி வந்துள்ளனர். இந்த நிலையில் நீதியும் நியாயமுமாக நடந்த முல்லைத்தீவு நீதிபதிக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படுத்தி, உயிரை பாதுகாக்க நாட்டை விட்டு தப்பியோடும் நிலைக்கு தள்ளியுள்ளதன் மூலம், ஸ்ரீலங்காவின் நீதித்துறைதான் ஈழ இனப்படுகொலைக்கு காவலாக இருக்கிறது என்பதையும் இந்நிலை வெளிப்படுத்தி நிற்கிறது.

### நீதிபதிக்கு உயிரச்சுறுத்தல்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவித்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். குருந்தூர் மலை விவகாரத்தில் வழங்கிய தீர்ப்புக்களுக்காக இலங்கை அரசும் சிங்களப் பேரினவாதிகளும் நீதிபதிக்கு கடும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளனர். தென்னிலங்கையில் அரசியல் முக்கியஸ்தராக கருதப்படுகின்ற, ராஜபக்சேக்களின் விசுவாசி, இனப்படுகொலையாளி சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிபதிக்கு ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் இருந்தே கடுமையான முறையில் எச்சரிக்கையை விட்டமை இலங்கை அரசியில்ல பெரும் அதிர்வுகளை உருவாக்கியிருந்தது.

இது சிங்கள பௌத்த நாடு என்பதை முல்லைத்தீவு நீதிபதி மறக்க வேண்டாம் என்றும் முல்லைத்தீவு நீதிபதி ஒரு மன நோயாளி என்றும் அவர் பதவி விலக வேண்டும் என்றும் சரத் வீரசேகர கூறியிருந்தார். அத்துடன் ஒரு பாராளுமன்ற உறுப்பனராக இருக்கும் அவர், ஒரு நாட்டின் அரச உயர் சட்ட சபையான (ஸ்ரீலங்காவில் அது கேள்விக்குறியான விடயம்தான்) பாராளுமன்றத்தில் இருந்து சுயாதீனமாக இயங்கும் நீதித்துறையை சார்ந்த நீதிபதி ஒருவருக்கு இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கின்ற அளவில்தான் ஸ்ரீலங்காவின் ஆட்சியும் நீத்துறையும் இருக்கிறது என்பதை நாம் இந்த இடத்தில் தெரியவும் உலகிற்கு தெரியப்படுத்தவும் வேண்டியதாகும்.

### மறைமுக அச்சுறுத்தல்

இதேவேளை முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா சட்டமா அதிபரினால் அழைக்கப்பட்டு குருந்தூர்மலை தொடர்பான நீதிமன்ற கட்டளைகளை மாற்றியமைக்க வேண்டும் என்று நிர்பந்திக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். சட்டத்தை காப்பாற்ற வேண்டிய சட்மா அதிபர் இதைத்தான் ஸ்ரீலங்காவில் செய்து வருகிறார். அத்துடன் இவ்வாறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டமைக்கு மேலதிகமாக நீதிபதிக்கான பொலிஸ் பாதுகாப்பு அதிரடியாக குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நீதிபதிமீது ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வாளர்கள் கண்காணிப்பை தீவிரப்படுத்தினர். நேரடியாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களும் மறைமுகமாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களும் நீதிபதிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தின.

இதனால் தாம் மிகவும் நேசித்த நீதிபதி பதவியை விட்டு விலகுவதாக முல்லைத்தீவு நீதிபதி தனது பதவி விலகல் கடித்தில் கூறியுள்ளார். நீதிபதி ஒருவர் தனது உயிரை பாதுகாக்க நாட்டை விட்டு தப்பியோடும் நிலை, வெளிநாடு ஒன்றில் தஞ்சம் புகும் நிலை ஸ்ரீலங்கா குறித்த பல்வேறு செய்திகளை இந்த உலகத்திற்கு தெரியப்படுத்துகின்றது. அத்துடன் நீதிபதி ஒருவருக்கே இந்த நிலை என்றால் சாதாரண ஈழத் தமிழ் மக்கள் என்ன நிலையில் வாழ்கிறார்கள் என்பதையும் எந்த உயர் பதவியில் தமிழர்கள் இருந்தாலும் அவர்கள்மீது அச்சுறுத்தலும் ஒடுக்குமுறையும் தொடரும் என்பதையும் இந்த நிகழ்வு உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது.



தீபச்செல்வன்

### குருந்தூர் மலை விவகாரம்

முல்லைத்தீவு நீதிபதிமீது ஸ்ரீலங்கா அரசும் பேரினவாதிகளும் ஒடுக்குமுறையை மேற்கொள்ள என்ன காரணம்? முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குருந்தூர்மலை ஈழத்து சைவத்தின் புராதனம் மிக்க பகுதி. அங்கே சில வருடங்களின் முன்னர் நடந்த அகழ்வாராச்சியின் மூலம் தாராலிங்கம் எனப்படும் எண்முகலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. அது ஈழத் தமிழர்களின் தொன்மையை சைவத்தின் தொன்மையை எடுத்துரைப்பதாக ஈழத்தின் வரலாற்றுப் பேராசிரியரும் யாழ் பலக்கைலக்கழக வேந்தருமான சி. பத்மநாதன் தெரிவித்தார். மேற்படி சிவலிங்கம் போன்றே தமிழ் நாட்டிலும் கண்டுபிடிக்கபட்டதுடன் அது பல்லவர் காலத்திற்குரியது என்றும் அறிஞர்கள் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கத்தை சிங்கள பௌத்த சமயத்திற்கு உரியது என்றும் அங்கே முன்னர் விகாரை இருந்தது என்றும் வழக்கம் போல பேரினவாதிகளும் சிங்கள அரசின் தொல்லியல் திணைக்களமும் கதைவிடத் தொடங்கியது. ஈழத் தமிழ் மக்கள் தமது வழிபாட்டு உரிமைக்காக போராடியதுடன் இது தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். குறித்த பகுதியில் எந்த நிர்மாணச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று முல்லைத்தீவு நீதிபதி கட்டளையிட்டார். ஆனால் நீதிமன்றக் கட்டளையை மீறி, அங்கே சிங்கள அரசும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் விகாரையை அமைத்து முடித்திருந்தனர்.

### ஆலயத்தில் அடாவடி

இந்த நிலையில் நீதிமன்ற கட்டளையை மீறியமை மற்றும் அதனை பாதுகாக்க தவறியமை தொடர்பில் பேரினவாத தரப்பு மீதும் ஸ்ரீலங்கா காவல்துறை தரப்பு மீதும் முல்லைத்தீவு நீதிபதி அதிருப்தி வெளியிட்டிருந்தார். அத்துடன் அங்கு பொங்கல் வழிபாடுகளை தமிழ் மக்கள் மேற்கொள்ள வருகை தந்த வேளையில் சிங்கள பௌத்த பேரினவாதிகள் பெரும் அடாவடிகளில் ஈடுபட்டனர். பொங்கலுக்காக மூட்டிய அடுப்பை காலால் மிதித்து அணைத்த நிகழ்வு ஈழத் தமிழ் மக்களை பெரும் கொந்தளிப்புக்கும் கவலைக்கும் உள்ளாக்கியது. இந்த நிலையில் மீண்டும் தமிழ் மக்கள் நீதிமன்றத்தின் பக்கம் நீதியை நாடினர்.

இந்த நிலையில் அங்கு தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமைகளை மறுக்க இடமளிக்க முடியாது என்றும் காவல்துறை பாதுகாப்புடன் தமிழர்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நீதிபதி கட்டளை இட்டிருந்தார். இந்த நிலையில் குருந்தூர்மலையில் தமிழ் மக்களின் வழிபாட்டுரிமையை உறுதிப்படுத்தும் வித்தில் முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா மேற்கொண்ட கட்டளைகள் சிங்கள அரசுக்கும் பேரினவாதிகளுக்கும் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆனாலும் வழக்குகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட வாதங்களின் அடிப்படையிலும் யதார்த்தமான சூழ்நிலையின் அடிபடையிலும் நீதிபதி சுயாதீனமாக இந்த கட்டளையை இட்டிருந்தார்.

### உள்ளக விசாரணை இப்படித்தானா?

ஈழத் தமிழ் மக்கள்மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடாத்த வேண்டும் என்று ஈழத் தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகிறார்கள். ஸ்ரீலங்காவின் நீதித்துறைதான் ஈழத் தமிழ் மக்கள்மீதான இனப்படுகொலைக்கு காவலாக இருந்தது என்பதை வரலாறு முழுவதும் உண்மைகளின் அடிப்படையில் ஈழத் தமிழ் மக்கள் தெரிவித்து வருகிறார்கள். அத்துடன் ஸ்ரீலங்கா நீதித்துறை நீதியாக நடந்திருந்தால் ஈழத் தமிழ் மக்கள்மீது இனப்படுகொலை நடைபெற்றிருக்காது என்பதுடன் ஈழத் தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடுகிற நிலைமையும் ஏற்பட்டிருக்காது என்பதும் இங்கே சுட்ட வேண்டியது.

இந்த நிலையில் இலங்கையில் நடந்த போர் தொடர்பான விடயங்களில் ஒருபோதும் சர்வதேச விசாரணையை நடாத்த இணங்க மாட்டோம் என்றும் உள்ளக விசாரணையை வேண்டுமானால் நடத்துகிறோம் என்றும் காலத்திற்கு காலம் ஆளும் ஸ்ரீலங்கா அரசு சொல்லி வருகிறது.

இந்த நிலையில், ஸ்ரீலங்காவின் நீதித்துறை எந்த விசித்திரத்தில் இருக்கிறது என்பதை நீதிபதி சரவணராஜாவுக்கு நிகழ்ந்த கதி எடுத்தியம்பியுள்ளது. சர்வதேச விசாரணை வழியாகவே ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற ஈழத் தமிழ் மக்களின் நம்பிக்கையை இந்த உலகம் புரிந்து கொள்ள இந்தச் சூழ்நிலையே போதுமானது.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 04 மலர் 40 ஒக்டோபர் 2023 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# கூட்டுக்கடிதங்கள் தமிழர்களுக்கான மூலோபாயம் அல்ல

இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயகப் போராளிகள், தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய ஏழு கட்சிகள் மீண்டும் கூட்டுக்கடிதங்களை வரைவதற்கான இணக்கப்பாட்டை இம்மாதத்தின் முதல்வாரத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் கூடி எட்டியுள்ளன.

தமிழ் மக்களின் விடயங்களில் தமிழ்க் கட்சிகள் கூடித் தீர்மானம் எடுத்து இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பதென்னமோ வரவேற்கப்பட வேண்டியதாக இருந்தாலும், இந்த இணக்கப்பாடானது, வெறுமனே 'கடித அரசியல்' என்ற வகையறாவுடன் முற்றுப்பெற்று விடுகின்றது.

ஏலவவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கும், இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கும் கூட்டாக கட்சிகள் கடிதம் அனுப்பியிருந்தன. பின்னரான நாட்களில் அந்தக் கடிதங்களை வரைந்தது முதல், திருத்தங்கள் செய்து இறுதி செய்தது வரையில் ஒவ்வொரு வாக்கியங்களுக்கும், உள்ளடக்கங்களுக்கும் ஒவ்வொரு கட்சிகளும் உரிமை கோரியிருந்தன.

இந்த நிலையில் தான் தற்போது கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் மீண்டும் கூட்டுக்கட்சிகளின் தலைவர்களின் கையொப்பதுடன் கடிதங்களை அனுப்புவதற்கு இணக்கப்பாடு எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு, 'சமகால' விடயங்களை உள்ளடக்கியதாகவே குறித்த இரு கடிதங்களினதும் உள்ளடக்கங்களும் இருக்கப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் பிரதமர் மோடிக்கான கடிதத்தில் ஏழுகட்சிகளின் தலைவர்களும் சந்திப்பொன்றைச் செய்வதற்கான நேர ஒதுக்கீட்டை கோருவதும் ஒரு விடயமாக உள்ளடக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எது எவ்வாறாக இருந்தாலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கும், ஏலவே பிரதமர் மோடிக்கும் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் விளைவுகள் என்ன என்பதை இந்த ஏழு கட்சிகளின் தலைவர்களும் பொதுவெளியில் பகிரங்கப்படுத்துவதற்கு தயாராக உள்ளனரா?

ஆகக்குறைந்தது, பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்துக்கான இந்தியாவின் பதில் என்னவென்பதையாவது இந்த ஏழுகட்சிகளின் பிரதிநிதிகளும் அறிவார்களா?


அவ்வாறிருக்கையில், மீண்டும் இராஜதந்திரிகளுக்கும், பிரதமர் மோடிக்கும் கடிதம் அனுப்புவதால் என்ன பயன் ஏற்பட்டுவிடப்போகின்றது என்ற கேள்வி இங்கு பிரதானமாகின்றது.

கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் தமிழர்களின் அத்தனை விடயங்களையும் நன்கறிந்துள்ளார்கள். அவர்கள் அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தினர், மதத்தலைவர்கள் உள்ளிட்டவர்களுடன் தொடர்ச்சியான சந்திப்புக்களை நடத்துகின்றார்கள். அதற்கும் அப்பால் நேரடியான களவிஜயங்களையும் மேற்கொள்கின்றார்கள்.

இன்னும் சொல்லப்போனால், மேற்படி கட்சியில் உள்ள அரசியல்வாதிகள் அறியாத விடயங்கள் பலவற்றை அவர்கள் அறிந்து வைத்திருகின்றார்கள் என்பதே யதார்த்தமாகின்றது. அதேபோன்றுதான், பிரதமர் நரேந்திர மோடிக்கும் விரல் நுணியில் விடயங்கள் நன்கே தெரியும். அவரைச் சந்திப்பதற்கு கூட கூட்டுக்கடிதம் அவசியமில்லை.

இராஜதந்திரமாக நகர்வதாக இருந்தால் இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் ஊடாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதும் நடைமுறைச்சாத்தியமாகின்றது. ஆகவே ஏழு அரசியல் கட்சிகளினது இந்தக் கூட்டுக் கடித விடயம் என்பது வெறுமனே அந்தந்தந்த கட்சிகளை வாக்காளர்கள் மத்தியில் பேசுபொருளில் வைத்திருப்பதற்கானதொரு இலகுவான உபாயமே அன்றி, தமிழ் மக்கள் சார்ந்த மூலோபாய இராஜதந்திர நகர்வாக அமையாது.

# இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான இரத்தக்களரியின் தொடக்கம்




இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான இரத்தக்களரியின் தொடக்கமாக அமைந்த சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு 23 ஆண்டுகள் அடைந்துள்ளன.

தனது இன அழிப்புக்கு இடையூறாக இருந்த ஊடகத்தின் மீது இரும்புக்கரத்தை பதித்த சிறிலங்கா அரசு, கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 ஆம் திகதி ஊடகவியலாளர் நிமலராஜன் சுட்டுப்படுகொலை செய்தது. ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த போது உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளேயே இந்த படுகொலை சம்பவம் அரங்கேறியது.


1990 களில் ஈழநாதம் பத்திரிகையில் தனது ஊடகப்பயணத்தை ஆரம்பித்த நிமலராஜன் பின்னர் தனது சிங்களமொழிப் புலமையால் பிபிசியின் செய்தியாளராகவும் பணியைத் தொடர்ந்தார். வடக்கில் சிறிலங்கா இராணுவத்தின் கொடுமைகளை துணிச்சலும் பிபிசிக்கு சிங்களத்தில் அறிக்கை செய்துவந்தார் நிமலராஜன். இது சிங்கள மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பிக்க அதனால் திணறிய சிறிலங்கா அரசு அவரது குரலை நசுக்கும் முடிவுக்கு வந்தது.

இதேவேளை நிமலராஜனை படுகொலை வழக்கின் சந்தேக நபர் கடந்த 2022 ஆம் அண்டு பெப்ரவரி மாதம் பிரித்தானியாவில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு 2000 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டுவரை 43 தமிழ் ஊடகவியலாளர்களை ஈழத்தமிழ் ஊடகத்துறை இழந்துள்ளது என்பது ஈடுசெய்யமுடியாததொரு பேரிழப்பாகும்.

ஊடகவியலாளர்களின் கண்களை இறு கக் கட்டி கைகளுக்கு பெரும் விலங்கு போட்டே இறுதி யுத்தத்தில் மாபெரும் இனப்படுகொலையை செய்து முடித்த இலங்கை அரசு இன்றும் அதனை தொடர்ந்து அரங்கேற்றிக்கொண்டிருக்கிறது.

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து



# ரணிலின் தேர்தல் சித்துவிளையாட்டு



*பரமன்*

சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவில் நடைபெற்ற 3ஆவது மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சி மாநாட்டில் பங்கேற்றுவிட்டு மீண்டும் நாடு திரும்பியதும், ஐக்கிய தேசிய கட்சியின் மாநாட்டில் கடந்த சனிக்கிழமை 21ஆம் திகதி பங்கேற்றிருந்தார்.

கொழும்பில் உள்ள சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்ற இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல விடயங்களை தொட்டுச் சென்றிருந்தார்.

குறிப்பாக, ராஜபக்ஷகளின் பாதுகாவலன் நானல்ல என்பதையும், பொருளாதாரத்தினை மீட்டெடுக்கும் சக்தி தமக்கே உள்ளதாகவும், சஜித் பிரேமதாச ஒரு அரசியல் கத்துக்குட்டி என்பதையும் சொல்லாமச் சொன்னார்.

இதனைவிடவும், அவர் ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டின் முதலாவது அரசியல் கட்சி என்ற வரலாற்றைக் கொண்டிருப்பதால் அதனை நவீன யுகத்துக்கு ஏற்றவாறு ஸ்மாட் கட்சியாகவும், அந்தக் கட்சியின் தலைமையில் நாட்டை ஸ்மாட் நாடாகவும் மாற்றவுள்ளதாகவும் அறிவிப்பை விடுத்துள்ளார்.

அதேநேரம், கட்சியை இளையவர்களிடத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் அறிவித்த அவர் அருகில் கட்சியின் பிரதி தலைவரான ருவான் விஜயவர்த்தனவையும் வைத்திருந்தார். இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க தனது மாமனாரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவையே பின்பற்றுகின்றார் என்பது தெளிவாக புலனாகிறது.

ஜே.ஆர். அக்காலத்தில் இருந்த காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி உள்ளிட்ட தலைவர்களையெல்லாம் தாண்டி எவ்வாறு இளையவரான ரணில் விக்கிரமசிங்கவின் கைகளில் ஐ.தே.கவின் தலைமைப்பொறுப்பினை சென்றடையச் செய்தாரோ அதேபோன்றுதான் தற்போதுள்ள மூத்தவர்களையெல்லாம் தவிர்த்துவிட்டு தனது மருமகனான ருவான் விஜயவர்த்தனவிடத்தில் கட்சியை ஒப்படைக்கப்போகின்றார் என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

அதேநேரம், ஐ.தே.க.வின் இந்த விசேட மாநாட்டில் உரையாற்றிய ரணிலின் உரையில் மிக முக்கியமானது தேர்தல் பற்றிய விடயம் தான். ஜனாதிபதி தேர்தலை அடுத்த ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளார். அதனைத்தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலையும், பின்னர் மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நடத்தவுள்ளதாக அவர் அறிவித்திருக்கின்றார்.

சிறிலங்காவில் தேர்தலை உரிய காலத்தில் நடத்தவதா இல்லையா என்பதை தீர்மானிப்பது அக்காலத்தில் ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதியே. அந்த அதிகாரம் தன்னிடம் தான் உள்ளது என்பதை சொல்லாமல் சொல்லியிருக்கின்றார் ரணில்.

ஜனநாயக மரபுகளை ஏற்றுக்கொண்டுள்ள எந்தவொரு நாடுகளும் உரிய காலத்தில் தேர்தலை நடத்துவது வழக்கமாகும். அந்த தேர்தல்களுக்கான அறிவிப்புக்களைச் செய்வது அந்தந்த நாடுகளின் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுக்கள் அல்லது அதன் தலைமையாளரான தவிசாளரே.

ஆனால், சிறிலங்காவில் மட்டும் தான் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு தவிசாளர் உள்ளிட்ட மூன்று உறுப்பினர்கள் உள்ளனர். இதனை விடவும் தேர்தல் ஆணையாளர் இருக்கின்றார். இத்தனை அதிகாரங்கள் மிக்க பதவி நிலைகள் காணப்பட்டாலும் தேர்தலை தீர்மானிப்பதென்னவோ ஜனாதிபதி தான் என்கின்ற அளவுக்கு ஜனநாயகம் சந்தி சிரிக்கும் நிலைக்குச் சென்றுள்ளது.

இதுவொருபுறிருக்கையில், ஜனாதிபதிக்கான பதவிக்காலம் எதிர்வரும் ஆண்டின் நவம்பர் 10ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது. இந்த நிலையில் குறித்த காலத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமா என்கின்ற அச்சமும் இப்போது ஏற்பட்டுள்ளது.

ஏனெ;னால், பாராளுமன்ற தேர்தல் முறைமை தொடர்பாக ஆராய்வதற்காக ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசர் பிராசாத் டெப் தலைமையில் ஒன்பதுபேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவானது வெறுமனே தேர்தல் முறைமை மட்டுமாக அல்லாது பாராளுமன்ற தேர்தல் தொடர்பான அனைத்து அம்சங்களையும் ஆராய்வதை பிரதான நோக்காக கொண்டுள்ளது.

ஆகவே, இந்தக்குழுவானது முன்வைக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் பாராளுமன்ற தேர்தல் முறைமை மாற்றத்துக்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாக நோக்கர்கள் கூறுகின்றார்கள். அவ்வாறு பாராளுமன்ற தேர்தல் முறைமையை மாற்றுவதாக இருந்தால் நிச்சயமாக சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். சிலவேளைகளில் ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்புடன் சேர்த்து சர்வஜேன வாக்கெடுப்பையும் நடத்த முடியும்.

இல்லாது விட்டால் ஜனாதிபதி தேர்தலை மட்டும் நடத்திவிட்டு, பாராளுமன்ற தேர்தலுக்கான முறைமையை மாற்றுவதாக கூறி காலத்தினை இழுத்தடிப்பதன் ஊடாக பாராளுமன்றத்திற்கான தேர்தல் பிற்போடப்படும் நிலைமையொன்று ஏற்படும்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்தில் அவருக்கு பெரும்பான்மை இல்லை. அடுத்த பாராளுமன்றத்திலும் கிடைப்பதற்கான ஏதுக்கள் அவருக்கு இல்லை. ஆகவே அவர் பாராளுமன்றத் தேர்தலை அவ்விதமான நிலைமை ஊடாக நிறுத்தி வைப்பதற்கும் முயலலாம்.

அவ்விதமான நிலைமையொன்று ஏற்படுமாக இருந்தால் நிறைவேற்று அதிகாரத்துடனான ஜனாதிபதியை மையப்படுத்தி ஆட்சியே நீளும். ஜனாதிபதி தனது கட்சியின் பிரதிநிதிகளுக்கு குழுக்களின் தலைவர்கள், விசேட செயலணிகளின் தலைவர்கள், ஆளுநர்கள் உள்ளிட்ட பதவிநிலைகைளை வழங்கி நிருவாகத்தினை மேற்கொள்வார். இதற்கான திட்டமொன்றும் ரணிலிடம் நிச்சயமாக இருக்காது என்று கூற முடியாது.

இவற்றைவிடவும், கடந்த மூன்று வாரங்களில் சமையல் எரிவாயு, எரிபொருட்கள், மின்சாரக்கட்ணம் ஆகியன கிரமமாக அதிகரித்து வரும் நிலையில், மீண்டும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன.

ஆகவே, நெருக்கடியான நிலைமைகளை அவசரநிலைமையாக பிரகடனப்படுத்தி தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினையே மீண்டுமொரு பதவிக்காலத்துக்கு நீடிப்பதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

இதேநேரம், மாகாண சபைகளுக்கான தேர்தலையும் 2025ஆம் ஆண்டு நடத்துவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். மாகாண சபைகளுக்கான எல்லைநிர்ணயம் மற்றும் தேர்தல்முறைமை மாற்றம் சம்பந்தமாக இரண்டு குழுக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக பிரதமர் தினேஷ் குணவர்த்த தலைமையில் ஒரு குழு உள்ளது. இதனை விடவும், பாராளுமன்றத்தத் தெரிவுக்குழுவொன்று விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் தினேஷ் குணவர்த்த தலைமையில் உள்ளது.

இந்த குழுக்கள் இரண்டும் தயாரித்துள்ள, தயாரித்து வருகின்ற அறிக்கைகளின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் முறைமை மாற்றப்படுமாயின் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியமாகும்.

அடுத்த பாராளுமன்றத் தேர்தல் இழுபடுகின்றபோது, மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைப்பதற்கு முடியாது போகலாம். அவ்வாறு கிடைக்காது போனால் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாது.

அதேநேரம், ஒருவேளை முறைப்படியாக பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டாலும், பாராளுமன்றம் யாருக்கும் பெரும்பான்மையற்ற தொங்கு நிலையில் உருவாகும் என்றால் மாகாண சபைகளுக்கான தேர்தல் முறைமை அங்கீகரிக்கப்படுவது முடியாத காரியமாகும்.

எனினும், ஏற்கனவே பாராளுமன்றத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் பங்கேற்பில் நடைபெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தல் முறைமை தொடர்பான தெரிவுக்குழுவில் இடம்பெற்ற 16உறுப்பினர்களில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எண்மருக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எண்மரும் இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றார்கள்.

குறிப்பாக, பழைய முறையில் (விகிதாசாரப் பிரதிநித்துவ முறை மற்றும் அதிகரிக்கப்படாத பெண்கள் பிரதிநிதித்துவம்) ஆகியனவற்றின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கான திருத்தத்தினை மீண்டும் பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவதாக இருந்தால் அதற்கு அங்கீகாரம் அளிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதாக இருந்தால் இருக்கின்ற மாகாண சபை தேர்தல் முறைமைக்கு அமை வாக முன்னெடுப்பதற்கான வாய்பொன்றே காணப்படுகின்றது. ஆனால் அந்த முறையில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாகவே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதிக்கு விருப் பமான மனோநிலைமை இல்லை.

ஏனெனில் மாகாண சபையின் முடிவுகள் ஜனாதிபதி தேர்தலில் எதிரொலித்துவிடும் என்பதால் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு தயாரில்லாத நிலையில் தான் ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார்.

இதனால் தான், அவர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைக்கூட நடத்தவற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவுக்கு வரும் வரையில் அமைதிகாத்து விட்டு தன்னிடம் காணப்பட்ட நிதி அமைச்சர் பதவிநிலையை வைத்து நிதியை விடுவிக்காது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைக்கு முழுமையான முட்டுக்கட்டையை ஏற்படுத்தினார்.

ஆக, அடுத்த தடவையும் ஜனாதிபதி பதவிக்காலத்தினை வகிப்பதற்கு விரும்பும் ரணில் விக்கிரசிங்க இவ்வாறு பல தேர்தல் சித்துவிளையாட்டுக்களை ஆரம்பித்துவிட்டார். ஆனால் இவையெல்லாம் அதிகாரங்களை ஒருபுள்ளியில் குவிக்கும் நிறைவேற்று அதிகாரத்தினை உச்ச அளவில் வெளிப்படுத்துவதற்கான நகர்வுகள் தான்.

# வலுவான எதிர்ப்பியக்கங்களே தேவை

செல்வழகன்

தமிழ் மக்கள் தற்கொலை மனோபாவம் கொண்டவர்கள் என்றொருகணிப்புண்டு. நடப்புசெய்திகளும் அதை உறுதிப்படுத்துகின்றன. இலங்கையில் தற்கொலை செய்து கொண்டவர்களின் பட்டியலை எடுத்துப் பார்த்தால் இந்த உண்மை வெளிப்படும். ஒரு காலத்தில் தற்கொடைகளால் உடனடிப் பயன்விளைவுகளை எமது சமூகம் கண்டது. அந்த மரணங்களுக்கு ஒரு பெறுமதியிருந்தது. அது பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுமிருந்தது. புறநிலைமைகளால் நீண்ட நோக்கில் அது நினைவுகளாகவே எஞ்சியுள்ளது.

நமது அரசியலும் அத்தகைய தற்கொலை மனோபாவ அரசியலாகவே நீள்கிறது. விடுதலைப் புலிகள் ஒரு அமைப்பாகத் திரண்டு, ஒரு கட்டமைக்கப்பட்ட நிழல் அரசாங்கத்தை ஸ்தாபித்ததைத் தொடர்ந்து பெருமளவில் மக்களை அணிதிரட்டினார்கள். ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் மக்களைத் திரளாகக் கொண்டு சென்று அவற்றை வெற்றிகரமானதாக ஆக்கினார்கள். ஐக்கிய நாடுகளின் வதிவிட அலுவலகங்களின் முன்பாகவும், அரசாங்கத்தின் மாவட்டச் செயலகங்களின் முன்பாகவும் எத்தனையோ பெரும் ஆர்ப்பாட்டங்களை அவர்களால் செய்ய முடிந்தது. ஆனாலும் அந்த ஜனநாயகப் போராட்டங்கள் எந்தப் பலனையும் தரவில்லை. பதிலடித் தாக்குதல்களால் அரச இயந்திரத்தை நிலைகுலைய வைத்தே – வன்முறை மூலமே – பலவற்றைப் புலிகள் சாதித்தனர்.


2009இல் புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அதுவரை புலிகளின் நேரடித் தலைமீட்டில் இயங்கிய அரசியல் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்க முயன்றன. எனினும் 2009இன் பின்னரான இந்த 24 வருட காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுருங்கி வர, தனித்தனிக் கட்சிகள் பல கிளைத்தெழுந்தன. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்று தோற்றம் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது உடைந்து சிதிலமாகி விட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி), தமிழரசுக் கட்சி (ஆனந்தசங்கரியிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகாரம் இருந்தமையால் ஏனையவர்கள் தமிழரசுக் கட்சியை உயிர்ப்பித்து இணைந்து கொண்டனர்) என்பன இணைந்து கொண்டன.

இந்த மாற்றங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்தன. தமிழரசுக் கட்சிக்குள் உள்வாங்கப்பட்டு, தேர்தல் களத்தில் முன்னிறுத்தப்பட்ட அனந்தி சசிதரன், ஐங்கரநேசன், விக்னேஸ்வரன் உள்ளிட்ட பலர் பின்னர் வெளியேறினர். ரெலோ, ஈபிஆர்எல்எப் என்பனவும் பிளவுண்டன.

தமிழரசுக் கட்சியின் நடவடிக்கையால் குறிப்பாக, தமிழரசுக் கட்சிக்குள் இறக்குமதி செய்யப்பட்டவர்களின் கரங்கள் உயர்ந்ததால் கட்சிக்குள்ளும், கூட்டமைப்புக்குள்ளும் பல குளறுபடிகள் நேர்ந்ததன் விளைவாகவே அதிக பிளவு உருவானது. கதிரை ஆசை கொண்ட ஊடகர்கள் சிலரும் உள்ளோடிய விரிசலை மேலும் பிளந்தனர்.

இதன் விளைவு இன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் அதிகம் ஒரே விடயத்தைப் பேசினாலும் அவற்றுக்கிடையே பிளவுகள் வரமாகக் கிடக்கின்றன.




போரின் பின்னர் ஒவ்வொருவரும் யார் அதிகம் தூய்மையானவர்கள் என்பதை நிறுவுபவர்களாகவே உள்ளனர். இந்த நிறுவுதலுக்காக மற்றவரை எந்தளவு தூரம் சேறு பூசி துரோகியாக்கலாம் என்பதிலேயே குறியாக உள்ளனர்.

இப்போது தமிழ்த் தேசிய அரசியலில் அதிகம் கவனத்துக்குரியதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் அமைந்து கொண்டது. முல்லைத்தீவின் குருந்தூர் மலை, யாழ்ப்பாணத்தின் தையிட்டி, திருகோணமலை ஆகிய இடங்களில் புதிதாக விகாரைகளை நிறுவியமை, மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல்தரை சிங்களக் குடியேறிகளால் ஆக்கிரமிக்கப்பட்டமை என பிரச்சினைகள் பல இருப்பினும் நீதிபதி அச்சுறுத்தலுக்கும், அதனால் மன அழுத்தத்துக்கும் உள்ளானதாகத் தெரிவித்து நாட்டை விட்டு வெளியேறிய பிரச்சினையே இன்று புலம்பெயர்ந்தவர்கள் உள்ளிட்ட தமிழர்கள் மத்தியில் அதிகம் பேசுபொருளாகியிருக்கிறது. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளையும் இது உசுப்பி விட்டிருக்கிறது.

யார் பூனைக்கு மணி கட்டுவது என்று அறிக்கைப் போரில் இறங்கிய தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் வாளாவிருந்த நிலையில் சட்டத்தரணிகள், சிவில் அமைப்புகள், மாணவர்கள் என உதிரியாக ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தலைப்பட்ட நேரத்தில் தமது மௌனத்தைக் கலைத்து செயற்படவேண்டிய நெருக்கடிகளை எதிர்கொண்டன. உள்ளூராட்சித் தேர்தலோடு தமிழரசுக் கட்சி தனிவழி சென்றமையால் கையறுநிலையில் இருந்த ரெலோவும், புளொட்டும், தமிழ்த் தேசியக் கட்சி(ரெலோவில் இருந்து பிரிந்த கட்சி), ஜனநாயகப் போராளிகள் ஆகியவற்றை இணைத்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை உருவாக்கியிருந்தன. இந்தக் கூட்டணி தமிழரசுக் கட்சி, க.வி.விக்னேஸ்வரனின் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றுடனும் பேசி ஒரு மனித சங்கிலிப் போராட்டத்தை நடத்த நாள் குறித்தன. ஒக்ரோபர் 4ஆந் திகதி நடைபெற்ற இந்த மனித சங்கிலிப் போராட்டம் எதிர்பார்த்த வெற்றியை ஏற்படுத்தவில்லை. ஒவ்வொருவருக்கும் பிரதேசங்கள் பகிர்ந்து வழங்கப்பட்டு ஆரம்பித்த இந்தப் போராட்டத்தில் புளொட் அமைப்பால் சில நூறு தொண்டர்களை அணிதிரட்ட முடிந்த போதும் ஏணைய கட்சிகளால் 50பேரைக் கூடத் திரட்ட முடியவில்லை. அறுந்த சங்கிலிப் போராட்டமாக அதனை நடத்த வேண்டிய இக்கட்டுக்குள் கட்சிகள் தள்ளப்பட்டன.

இந்த நிலையில் பூரண கடையடைப்புப் போராட்டத்தை நடத்த தமிழ்க் கட்சிகள் முடிவு செய்தன. இதையும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியே க.வி.விக்னேஸ்வரனுடன் சேர்ந்து முன்னெடுத்திருந்தது. இது தொடர்பான கூட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் கலந்து கொண்டார். அது தமிழரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி விட பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் மாவை சேனாதிராஜாவே கலந்து கொண்டார். கடந்த 15ஆந் திகதி நடத்தப்படவிருந்து கைவிடப்பட்ட இந்தக் கதவடைப்பு என்ற ஹர்த்தால் 20ஆந் திகதி நடத்தப்பட்டது.

தமிழரசியலில் கதவடைப்பு என்பது காலங்காலமாக நடந்து வந்த ஒன்று. ஆரம்பத்தில் சத்தியாக்கிரகப் போராட்டங்கள் நடத்தப்பட்ட போதும் தலைவர்கள் தாக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட சம்பவங்கள் அரங்கேறியிருந்தன. அதன்பின்னர் தலைவர்கள் உண்ணாவிரதமிருப்பது, முற்றுகைப் போராட்டம், சாலை மறியல் என்பன நின்று போயின. இயக்கங்கள் பல இருந்த காலத்தில் அதிகம் கதவடைப்பே நடைமுறையில் இருந்தது. ஒவ்வொரு இயக்கமும் கதவடைப்பு அறிவிப்பை விடுத்து இயல்பு வாழ்க்கையைக் குலைத்தன. இதை மீறுபவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

இராணுவம் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் இந்தக் கதவடைப்பு பெரும் சிக்கலானதாக இருந்தது. கதவடைப்பு செய்தால் இராணுவத்தினர் தண்டிப்பர். கடைகளைத் திறந்து பேருந்துகள் ஓடினால் குண்டுகளை வெடிக்கச் செய்தும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் இயக்கங்கள் ஸ்தம்பிக்கச் செய்தன. திரிசங்கு சொர்க்கத்தில் மக்கள் இருந்தனர். தற்போதும் அந்த அச்சம் மக்களிடத்தில் உள்ளது.

எனவேதான் அரசியல் கட்சிகளும் தமது இயலாமையை மறைத்து தமது செல்வாக்கை வெளிக்காட்ட ஹர்த்தாலை – கடையடைப்பை ஒரு கருவியாக கைக்கொண்டு வருகின்றன. 2009ற்குப் பிற்பட்ட காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்னெடுக்கப்பட்ட கடையடைப்புகள் கடும்போக்கு ஆட்சியாளர்களான மஹிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச காலத்தில் எல்லா இடங்களிலும் முன்னெடுக்கப்படாமல் பிசுபிசுத்துப் போயின. மைத்திரிபால சிறிசேனவுடனான தேனிலவுக் காலத்திலும், தற்போதும் அவை ஓரளவுக்கு வெற்றியைத் தந்துள்ளன.

தமிழ் அரசியல் கட்சிகளிடம் இதை விட்டால் வேறு போராட்ட மார்க்கமில்லை. எனவே கதவடைப்பு அறிவித்தலை வெளியிடுகின்றன. இது ஒரு வகையில் கையறுநிலைதான். இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது தவிர வேறொன்றும் நிகழப் போவதில்லை.

கதவடைப்புக்கு எதிரான நிலைப்பாட்டையே தமிழரசுக் கட்சிக்குள் சிலர் எடுத்திருந்தனர். அவர்களது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஊடகர்களும் அதனையே கருத்துகளாக கக்கியிருந்தனர். எனினும் ஏனைய கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து எல்லா இடங்களிலும் ஆதரவு கோரிப் பயணித்து, தொடர்புடைய தரப்புகளைச் சந்தித்து ஆதரவு வட்டத்தைப் பெருக்கிக் கொண்ட நிலையில் கதவடைப்புக்கு ஆதரவு வழங்குமாறு தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அறிக்கை விட வேண்டி ஏற்பட்டது.

இந்தக் கடையடைப்பு அல்லது பொதுமுடக்கம் மக்களின் இயல்பு வாழ்க்கையை, குறிப்பாக அன்றாடங்காய்ச்சிகளது வாழ்வைப் பாதிக்கச் செய்துள்ளது என்பது புறக்கணிக்கத்தக்கதல்ல. ஆயினும் இலங்கையின் நீதிப் பொறிமுறை தமிழர்களுக்கு நீதியை வழங்காது என்பதை மேற்குலகம் நிறுவுவதற்கு இந்தக் கதவடைப்பும் சிறிய அளவில் உதவக்கூடும். எனவேதான் பல சிவில் அமைப்புகளும் இதனை ஆதரித்தன.

இனியாவது தற்கொலைக்கொப்பான இத்தகைய செயற்பாடுகளைத் தவிர்த்து நாடாளுமன்றுக்கு உள்ளேயான போராட்டம், நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தல், கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்புகளின் அலுவலகங்கள், நாடுகளின் தூதரகங்கள், அரச தலைவர்களின் இல்லங்கள் முன்பாக ஆர்ப்பாட்டம், சத்தியாக்கிரகம் என்பவற்றை நடத்துதல் முதலான வலுவான எதிர்பியக்கங்களை மேற்கொள்வது குறித்துச் சிந்திக்க வேண்டும்.



# ரணில் - சுரேஷ் சாலே மறக்கப்பட்ட பக்கம்

**தேசிகன்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் சம்பந்தமாக சனல் 4 வெளியிட்டுள்ள காணொளியில் நாட்டின் தற்போதைய அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே பிரதான நபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். இதனையடுத்து சர்வதேச விசாரணையை நிராகரித்து உள்ளக விசாரணைக் குழுவை அமைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே வாய்திறக்கவே இல்லை.

இந்நிலையில், சிரேஷ்ட ஊடகவியலாளர்களான சுனந்த தேசப்பிரிய மற்றும், உபுல் ஜோசப் பெர்ணான்டோ ஆகியோர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பற்றி குறிப்பிட்டுள்ள விடயங்கள் குறித்து அதியுச்ச கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது அமர்வு நடைபெற்றுக்கொண்டிருந்த தருணத்தில் கடந்த 25ஆம் திகதி அங்குள்ள குழு அறையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சனல்4 ஊடகம் தயாரித்த காணொளி காட்சிப்படுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அந்தக் காணொளியைத் தயாரித்த நிறைவேற்றுத் தயாரிப்பாளர் பெஞ்சமின் டி பியர் மற்றும் இயக்குநர் ரொம் வோக்கர் பங்கேற்ற திறந்த கலந்துரையாடலொன்று நடைபெற்றிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் காணொளியைத் தயாரித்த பெஞ்சமின் டி பியர் மற்றும் ரொம் வோக்கர் ஆகியோரின் கருத்துக்களை விடவும், சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய அவர்களிடத்தில் கேள்வியொன்றைத் தொடுக்கும் போது குறிப்பிட்ட விடயமொன்று மிகவும் முக்கியமானதாகின்றது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய, தனது கேள்வியில், “இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்தபோது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக விசாரணைகளைச் செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு முன்பாகச் சென்று வழங்கிய இரகசிய சாட்சியத்தினை நான் வாசித்துள்ளேன். அது பகிரங்கமான ஆவணம் அல்ல.

அந்த ஆவணத்தின் பிரகாரம், தற்போது அரச புலனாய்வுப் பிரிவின் தலைமைத்துவத்தை வகிக்கும் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. அதற்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயை நன்கு அறிவதாக கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு கூறுவதற்கு காரணம், 80களில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுப்பதற்காக முஸ்லிம் துணை இராணுவக்குழுக்களை உருவாக்கியவர் சுரேஷ் சாலேயே ஆவார். அக்காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் ஆட்சியில் அங்கம் வகித்த ஒருவராக உள்ளார்.

ஆகவே சுரேஷ் சாலே, சஹ்ரானை தொடர்பு கொள்வதற்க எதற்காக ஆசாத் மௌலானவை (சனல் 4 இற்கு சாட்சியம் வழங்கியவர்) தொடர்பு கொள்ள வேண்டும் என்கின்ற கேள்வி எழுகின்றதல்லவா? என்று குறிப்பிட்டுள்ளார். சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய அங்கு மேலும் சில கேள்விகளை தொடுத்திருந்தபோதும் அவை இங்கு கவனம் செலுத்தப்படும் விடயங்களுடன் தொடர்புபட்டவையல்ல.

அவ்வாறான நிலையிலி, சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளதன் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே முஸ்லிம் துணை ஆயுதக்குழுக்களை உருவாக்கியுள்ளமையும், சமகாலத்தில் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்துள்ளமையும், அக்காலத்திலிருந்தே சுரேஷ் சாலேயை நன்கு அறிந்து வைத்துள்ளதாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்கூறியதும் மிகவும் முக்கியமானதாகின்றது.

இந்த இடத்தில், மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே சிறந்த புலனாய்வு அதிகாரியா, அல்லது சனல்4 குற்றம் சாட்டும் வகையில் சர்ச்சைகளுக்குரியவரா அவரது 'மறுமுகம்' என்னவென்று அடுக்கடுக்காக எழும் கேள்விகளுக்கு விடை காண்பதாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுரேஷ் சாலே பற்றி அறிந்து வைத்துள்ள விடயம், என்னவென்பது வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.

இந்நிலையில், மற்றொரு சிரேஷ்ட ஊடகவியலாளரான உபுல் ஜோசப் பெர்ணான்டோ, 'மைத்திரிகோட்டாரணில் கூட்டணி' என்ற பத்தியில் முக்கியமானதொரு விடயத்தினைக் கூறியுள்ளார்.

குறித்த பத்தியில், “மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஒரு வருடத்தின் பின்னர், 2016 ஒக்டோபர் 12ஆம் திகதி இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் உரையாற்றியபோது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளை நீதிமன்றதின் முன் நிறுத்தியமைக்கு கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக இதற்கு முன்னர் தான் வாயை மூடிக்கொண்டிருந்தாலும், இப்போது நல்லாட்சி ஆளும் தரப்பின் நடவடிக்கைகளுக்கு எதிராகக்குரல் கொடுக்கவேண்டி வந்திருக்கிறது.

இதன்மூலம் நல்லாட்சி என்ற பெயரில் தானும் ரணில் விக்கிரமசிங்கவும் சேர்ந்து அமைத்த ஆட்சி தகர்படப்போகிறது என்றார்.

மைத்திரி போட்ட இந்த வெடிகுண்டால் நசுக்கப்பட்டது பிரதமர் ரணிலும், ஐ.தே.கவும் தான். ரணில் உடனடியாக ஐ.தே.க. அமைச்சர்களை அழைத்து மைத்திரியின் கூற்றுக் குறித்து ஆலோசித்தார். அப்போதைய இராணுவப் புலனாய்வுத்துறைப் பொறுப்பதிகாரியான சுரேஷ் சாலே வழங்கிய அறிக்கையால் கோபடைந்தே மைத்திரி இவ்வாறு உரையாற்றியிருக்கிறார் என்று ரணில் காதுக்கு தகவல் எட்டியது.

ஆளும் தரப்பால் இராணுவ அதிகாரிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் நீதிமன்றப் படியேற்றப்பட்டதன் விளைவாகக் கோபமடைந்தவர்கள் வழங்கிய கருத்துக்களின் அடிப்படையில் சாலே அந்த அறிக்கையை மைத்திரிக்கு வழங்கியிருகிறார்.

அப்படிக்கோபமடைந்தவர்கள் இராணுவத்துக்குள் ஆட்சிக்கு எதிரான செயற்பாட்டாளர்களாக அணிதிரளும் அபாயம் இருந்தது என்ற எச்சரிக்கையும் அந்த அறிக்கையில் இருந்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து, மைத்திரியையும் ரணிலையும் ஒருவருக்கு ஒருவர் எதிரானவர்களாகத் திருப்பி விட்டு ஆட்சியைக் கவிழ்க்க கோட்டாபய ஆதரவு இராணுவப் புலனாய்வு அதிகாரியான சுரேஷ் சாலே சதி செய்கிறார் என்று ரணிலும் அவரது அமைச்சரவை அமைச்சர்களும் அப்போது கருதினர்.

அதனால் அத்தகைய அதிகாரிகளை உடனடியாக நீக்குவது என்று அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது.

இந்த அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின்னர் அது பற்றி அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அப்போதை அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, இராணுவப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி சாலேயின் பெயரைக் குறிப்பிட்டு இராணுவப் புலனாய்வுத் தலைவர் யாழ்ப்பாணத்தை நிலைகுலையச் செய்கிறார். அங்கு மக்களைக் கொலை செய்யும் ஆவா குழு இராணுவப் புலனாய்வாளர்களின் உருவாக்கம் என்றார்

அதனையடுத்து பேராசிரியர் சரத் விஜேசூரிய, இதற்கு ஒருபடி மேலே சென்று ஜனாதிபதி மைத்திரிக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையே பிரச்சினைகளை உருவாக்கி, ஆட்சியை நிலைகுலையச் செய்கிறார் இராணுவப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி சுரேஷ் சாலே. ஆகவே உடனடியாக அவரது பதவியிலிருந்து விலக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதுமட்டுமன்றி, பேராசிரியர் சரத் விஜேசூரிய உள்ளிட்ட சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் பலர் சேர்ந்து மைத்திரியிடம் சென்று சாலே பற்றி முறையிட்டதைத் தொடர்ந்து மைத்திரி அவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பதவியிலிருந்து அகற்றினார்' என்றுள்ளது.

ஆக மேற்படி இரு சிரேஷ்ட ஊடகவியலாளர்களின் கருத்துப்படி, 80களில் இருந்து சாலேயின் செயற்பாடுகளை நன்கறிந்தவரும், நல்லாட்சிக்காலத்தில் ஆட்சியையும், தனது கட்சியையும் பாதுகாப்பதற்காக சாலேயை பதவியிலிருந்து நீக்கும்படியும் அழுத்தமாக வலியுறுத்திய நபர் தான் தற்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க.

அவர் தலைமையிலான அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்பு கட்டமைப்பை உறுதிப்படுத்தும் பாத்திரங்களில் முக்கியமான வகிபாகத்தைக் கொண்டிருக்கும் அரச புலனாய்வுத்துறைத் தலைமைப் பதவியில் நீடித்துக்கொண்டிருப்பவர் தான் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே.

சுரேஷ் சாலேயை குறித்த பதவிக்கு நியமித்தவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அவர் கூட அப்பதவியில் இருந்து மக்கள் எழுச்சியால் விரட்டியடிக்கப்பட்டு விட்டபோதும், சர்வதேச ரீதியாக சர்ச்சைகளுக்கு உள்ளாகியிருக்கும் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயை அப்பதவியிலிருந்து தற்காலிகமாக நிறுத்துவதற்குகூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகவில்லை.

ஏனென்றால், பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, முப்படைகளின் பிரதான ஜெனரல் சவேந் திரசில்வா, அரச புலனாய்வுப் பிரிவுத் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே உள்ளிட்டவர்கள் ஒரே நேர்கோட்டில் இருக்கின்றனர்கள்.

அவர்கள் பேணிவரும் சமநிலையைக் குலைத்தால் தனது ஆட்சி நிலைகுலையலாம். அவ்வாறான நிலைமை நாட்டுக்கு பாதகத்தை ஏற்படுத்துகிறதோ இல்லையோ நிச்சயமாக 'மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி' என்ற தனது அரசியல் வாழ்நாள் கனவை சீரழிக்கும் என்பதை புரிந்து வைத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதேநேரம், 1994ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டை ஆட்சிசெய்த ஜனாதிபதிகளான, சந்திரிகா, மஹிந்த, மைத்திரி, கோட்டாபய வரையிலான அதிகாரவர்க்கம் 'ரணில் மையவாத' நட்புச்சக்திகளாகியுள்ளன.

ஆக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நிராகரிப்பு மட்டுமல்ல, உள்ளக விசாரணைகள் கூட கைகழுவப்படலாம்.

# ரணில் இன்னொரு ராஜபக்ச ஊடக ஒடுக்குமுறையாளன்

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் தெரிவிப்பு

ஊடகங்கள்மீது அடக்குமுறைகளை மேற்கொள்ளுவதில் இன்றைய இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்க, இன்னொரு ராஜபக்சவாக செயற்படுகிறார் என்பதை அண்மையில் அவர் ஜெர்மனிய ஊடகத்துடன் மேற்கொண்ட கொந்தளிப்பு வெளிப்படுத்தியதை சுட்டிக்காட்டியுள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையம், ரணிலின் ஊடக ஒடுக்குமுறை முகத்தை பன்னாட்டு சமூகம் இதன் வாயிலாக அறிந்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளது. இது தொடர்பில் தமிழ் தேசிய ஆய்வு அமையம் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:

### ஜெர்மனிய ஊடகத்தின் கேள்விக்கணை

“அண்மையில் ஸ்ரீலங்கா அதிபர் ரணில் விக்கிரமசிங்க ஜெர்மனிய நாட்டுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அந்நாட்டின் பெர்லின் நகரில் இடம்பெற்ற உலகளாவிய கலந்துரையாடலில் பங்கு பற்றச் சென்ற இலங்கை அதிபரிடம் ஜெர்மன் நாட்டின் தேசிய ஊடகங்களில் ஒன்றாக கருதப்படும் DW International செய்தி சேவையின் முக்கிய ஊடகவியலாளர் மார்டீன் ஹக் சந்தித்து மிக நீண்ட நேர்காணல் ஒன்றை பதிவு செய்திருந்தார்.

இதன் போது சனல் 4 தொலைக் காட்சி வெளியிட்ட ஆவணப்படம் தொடர்பில் ஊடகவியலாளர் தொடுத்த கேள்விகளுக்கு இலங்கை அதிபர் ரணில் அடைந்த சீற்றம் பல்வேறு உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளது.

இதன் போது சனல் 4 தொலைக் காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படம் முக்கிய பேசுபொருள் ஆனது.

கடந்த 2019ஆம் ஆண்டு இலங்கையை உலுக்கிய ஈஸ்டர் படுகொலை குறித்த உண்மைகளை சனல் 4 தொலைக் காட்சி அண்மையில் வெளிக்கொணர்ந்திருந்தது. பிள்ளையான் எனப்படும் ஸ்ரீலங்கா அரசின் ஒட்டுக்குழுவில் சேர்ந்து இயங்கிய அசாத் மௌலானா என்பவரின் சாட்சியம் இதில் முக்கியம் பெற்றுள்ளது. அவரை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சனல் 4 தொலைக்காட்சி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கு ஸ்ரீலங்கா அரசே பதில் கூற வேண்டும்.

### ராஜபக்சக்களின் சூழ்ச்சித் தாக்குதல்

2019ஆம் ஆண்டு ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற அதிபர் தேர்தலின் போது கோத்தபாய ராஜபக்சவுக்கும் சஜித் பிரேமதாசாவுக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. இந்த நிலையில் ஸ்ரீலங்காவில் ஆட்சியைக் கைப்பற்றுவதாக இருந்தால் ஈஸ்டர் தாக்குதலை நடாத்தி இலங்கையின் பாதுகாப்பு கேள்விக்குறி ஆகிவிட்டது என்பதை காண்பித்து, தானே ஸ்ரீலங்காவை பாதுகாக்க சிரயான தலைவர் என்ற தோற்றப் பாட்டை ஏற்படுத்தி ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற திட்டமிடலை கோத்தபாய ராஜபக்ச மேற்கொண்டுள்ளமை அசாத் மௌலானாவின் வாக்குமூலத்தின் ஊடாக அதிர்ச்சிகரமாக வெளிப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அப்போது சிறை தண்டனை அனுபவித்து வந்த பிள்ளையான், அதிலிருந்து தப்பிக்கொள்ளுவதாக இருந்தால், இந்த தாக்குதலை கோத்தபாயவுக்காக நடாத்த வேண்டும் என்றும் அதன் வாயிலாக கோத்தபாய ஜனாதிபதி ஆனவுடன் தான் விடுதலை ஆக முடியும் என்றும் நம்பி ஈஸ்டர் தாக்குதலை நடாத்தியதாக அசாத் மௌலானா கூறியுள்ளதே பின்னர் நடந்த நிகழ்வாகவும் உள்ளது. இந்த அடிப்படையில் ராஜபக்சக்கள் ஆட்சியைக் கைப்பற்ற நடாத்திய சூழ்ச்சித் தாக்குதலே ஈஸ்டர் படுகொலை என்பது உலகத்தின் மத்தியில் அம்பலமாகியுள்ளது.




### சிங்களவர்களின் ஆதங்கம்

இதேவேளை சனல் 4 தொலைக் காட்சி வெளியிட்டுள்ள செய்தியை சிங்கள மக்கள் நம்புவதுடன் ஸ்ரீலங்கா அரசு மீதும் தாக்குதலை மேற்கொண்ட ராஜபக்ச உள்ளிட்ட குள்ளவாளிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குரல் வலுத்து வருகின்றது.

இதேவேளை கிறீஸ்தவ உயர் மத குருவான கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள், ஈஸ்டர் படுகொலையாளிகள் தண்டிக்க வேண்டும் என்ற கருத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார். அத்துடன் ஆட்சியாளர்கள் ஈஸ்டர் படுகொலை தொடர்பில் அசமந்தாக இருப்பதாகவும் அவர் அடிக்கடி வருத்தமுற்றார்.

இதேவேளை கடந்த காலத்தில் வன்முறையால் மக்களை கொன்றவர்கள் மீது அதே வன்முறை நிகழ்ந்து அவர்கள் அழிக்கப்பட்டது போன்று ஈஸ்டர் படுகொலையாளிகள்மீதும் இறைவனின் நிந்தனை அமையும் என்ற சாபத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படத்தில் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களின் கருத்துக்களும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா அரசு மீதும் ரராஜபக்சக்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சிங்கள கத்தோலிக்க மக்களின் குரலாக இவர் நிற்பதை நாம் அவதானிக்க வேண்டும்.

### சிங்கள தலைவர்களும் ஏற்பு

இதேவேளை ஸ்ரீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஈஸ்டர் படுகொலை தாக்குதல் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் சர்வதேச விசாரணை நடாத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவுடன் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து அந்நாட்களில் ஆட்சி நடாத்திய போதும் இன்று ரணில் தனது ஆட்சி அதிகார நலனுக்காக இந்த தாக்குதல் குறித்த உண்மைகளை மறைத்து ராஜபக்சக்களை காப்பாற்ற முனைவதை சிங்கள மக்கள் நன்கு அறிவார்கள்.

அத்துடன் சஜித் பிரேமதாசவும் சனல் 4 தொலைக்காட்சி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அது தொடர்பில் விசாரணை அவசியம் என்றும் கூறியுள்ளார். அத்துடன் இலங்கையில் ஈஸ்டர் டுகொலை குறித்த விசாரணைகள் இடம்பெற்றால் நீதி கிடைக்காது என்றும் சர்வதேச விசாரணை வழியாகவே நீதி கிடைக்கும் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இவர்கள் யாவரும் ஈஸ்டர் படுகொலையில் சர்வதேச விசாரணை தேவை என்று கூறுகின்ற அதேநேரம், முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு சர்வதேச விசாரணை தேவை என்று தமிழர்கள் கோரினால் சர்வதேச தலையீடு வேண்டாம் என தேசபக்தர்கள் ஆகியிருந்ததை கடந்த காலத்தில் கண்டிருக்கிறோம்.



### ரணில் ஏன் பதறினார்?

தனது ஆட்சிக்காலத்தில் நடந்த அநீதிப் படுகொலை தொடர்பில் வெளியான உண்மைகளை அம்பலப்படுத்தாமல் ரணில் பதறியமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

நிதானமாக ஒரு நாட்டின் தலைவர் பதில் அளிக்க வேண்டும். ஊடகவியலாளரை முக்குளிக்க வைத்து, அவரைப் பேசவிடாமல் செய்து, அவரை மடக்குவதில் ரணில் காட்டிய பதற்றமும் அக்கறையும் அவர் ராஜபக்சவினருக்கு ஆதரவாக செயற்படுகிறார் என்பதை தாண்டி அவர் இன்னொரு ராஜபக்சவாக செயற்படுகிறார் என்பதையே உணர்த்தியதை உலக மக்கள் பார்த்திருப்பார்கள். அத்துடன் ரணில் ஒரு ஊடக அடக்குமுறையாளன் என்பதையும் உலகம் கண்டிருக்கும்.

இதேவேளை ஈஸ்டர் படுகொலைக்காக சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொண்டால், ஈழத்தில் நடந்த சிங்கள அரசின் இனப்படுகொலைக்கான நீதிக்கும் சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அதனை தவிர்க்கவே ரணில் இவ்வாறு பதற்றம் அடைந்துள்ளார்.


இதன் வாயிலா இனப்படுகொலையாளிகளான ராஜபக்சக்களை காப்பாற்றுவதுடன் இனப்படுகொலையில் பங்குள்ள தன்னையும் பாதுகாக்க ரணில் முயன்றுள்ளார்.

எனவே, உலகம் இந்த சூழ்ச்சிகளைப் புரிந்து, சர்வதேச விசாரணை வழியாக ஈழத் தமிழர்களுக்கு இனப்படுகொலைக்கு நீதியை வழங்க முன்வர வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கிறது தமிழ் தேசிய ஆய்வு அமையம்....” என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு



# போராட்டங்களின் போக்கு




**தந்திரீகன்**

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ஆண்டொன்று முழுமையாக நிறைவடைந்திருக்கும் காலத்தில், தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் சக்தி 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற கோசத்தினை முழுமையாக உடைத்தெறிந்திருக்கிறார்.

இது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அறிவிப்புடன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தனித்தீர்மானத்தினால் நிகழ்ந்திருந்தாலும், அதில் ஜனாதிபதி ரணிலின் பங்கு காத்திரமாகவே இருக்கின்றது என்பது பகிரங்கமான விடயமாகும்.

அதுமட்டுமன்றி, இலங்கைத்தமிழரசுக்கட்சி தனி வழி செல்ல கூட்டமைப்பில் எஞ்சியிருந்த ரெலோவும், புளொட்டும், ஏற்கனவே வெளியேறியிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். உள்ளிட்டவற்றை அரவணைத்துக்கொண்டு சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் ஒப்பீட்டளவில் பலமான அணியொன்றை உருவாக்கும் முயற்சியும் தோல்வி கண்டமையும் அனைவரும் அறிந்தவொரு விடயம்.

ஆக, தமிழ்த் தரப்புக்கள் கூறுகளாக்கப்பட்ட நிலையில் தான் அவர் அதிகாரப்பகிர்வு, 13ஆவது திருத்தச்சட்டம் உள்ளிட்ட விடயங்கள் பற்றி பேச்சுக்களை முன்னெடுத்து ஈற்றில் அதனையும் ஒப்பேற்றாமல் கைகழுவும் நிலைக்கு வந்திருந்தார் ஜனாதிபதி ரணில்.

இந்த நிலைமைகளால் தமிழர்களின் இனவிடுதலை சார்ந்த அரசியல் முட்டுச்சந்துக்குள் நின்றது. பின்னர், சரத்வீரசேகர போன்றவர்களின் குருந்தூர்மலை ஆக்கிரமிப்பும், திலீபன் நினைவேந்தல் பவனி மீதான தாக்குதலும் வடக்கு தமிழ்த் தேசிய அரசியலை மெல்ல உயிர்ப்பித்தது.

ஒருங்கே கிழக்கில், திருகோணமலையில் புத்தர் சிலை வைப்பும், மட்டக்களப்பில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை விடயமும் கிழக்கில் தமிழ்த் தேசிய அரசியலை பேசுபொருளாக்கியிருந்தன.

எனினும், ஒட்டுமொத்தமாக பார்க்கையில் வடக்கு,கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் செயற்பாட்டு அரசியல் என்பது தேக்கநிலையில் தான் காணப்பட்டது.

இந்தப்பின்னணியுடன் பயணித்துக்கொண்ட தமிழ்த் தேசிய அரசியலை மீண்டும் இயக்க நிலைக்கு கொண்டுவருவதற்கான துருப்புச்சீட்டை வழங்கியவர் முல்லைத்தீவு மாவட்;ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா தான். குருந்தூர் மலை விவகாரத்தில் அவர் அளித்த தீர்ப்புக்களால் அவருக்க உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காணப்பட்டதாக கூறி பதவிகளை துறந்து நாட்டைவிட்டு வெளியேறியிருந்தார்.

இந்த வெளியேற்றம், நீதித்துறையின் மீதான சிறிலங்கா அரசாங்கத்தின் கிடுக்குப்பிடியை காண்பித்தது என்பதுக்கு அப்பால், வடக்கு,கிழக்கில் தமிழ்த் தேசிய அரங்கின் செயற்பாட்டு அரசியலுக்கான பெருவாயிலை திறந்தும் விட்டிருக்கிறது.

ஆரம்பத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தினை மையப்படுத்திய போராட்டங்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டாலும் தொடர்ந்த நாட்களில் வடக்கு,கிழக்கு பகுதிகளில் நீதிபதிக்கு நீதிகோரும் போராட்டங்கள் தீவிரமாகின.

இந்த நிலைமையானது, அரசியல் கட்சிகளுக்கு அறுவடை செய்வதற்கான நேரமாக அமைந்தது. இதனால், தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்து நின்றாலும், சூழலை உணர்ந்து ஒன்று கூடி முதலில் யாழ்ப்பாணத்தில் பாரிய மனிதச் சங்கிலி போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தன.

குறிப்பாக, இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகியன ஏகோபித்து இந்தப்போராட்டத்திற்கான அழைப்பினை விடுத்திருந்தன. அதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் வெளியில் நின்று ஆதரவளித்தது.

ஆனால், மருதானார்மடத்திலிருந்து யாழ்.நகரம் வரையிலான மனிதச் சங்கிலி போராட்டத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்றிருந்தபோதும், மனிதச் சங்கிலியில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட போதாமையினால் காங்கேசன் துறைவீதியின் நாச்சிமார் கோவிலுடன் மனிதச் சங்கிலி நிறுத்தப்பட்டது. அதுமட்டுமன்றி ஆங்காங்கே மனிதச் சங்கிலி அறுந்தும் காணப்பட்டது.

இந்த நிலைமையை உணர்ந்த ஏற்பாட்டாளர்கள் உடனடியாக மருதனார் மடத்திலிருந்து கொக்குவில் வரையில் உடனடியானதொரு ஏற்பாட்டில் கவனயீர்ப்பு பேரணியொன்றை நடத்தியிருந்தார்கள். எனினும், நீதித்தேவதையிடம் நீதிகோரும் மண்டியிட்ட போராட்டமும் பிசுபித்துப்போனது.

நிலைமைகளை உணர்ந்து கொண்ட ஏற்பாட்டாளர்கள், அடுத்ததாக வடக்கு,கிழக்கு தழுவிய ஹர்த்தாலை முன்னெடுப்பதற்கு தயாராகினார்கள். குறித்த கட்சிகளில் சட்டத்துறை சார்ந்த சிரேஷ்டமானவர் ஒருவர் தான் ஹர்த்தாலுக்கான திட்டத்தினை முன்வைத்தவராக உள்ளார்.

ஏனென்றால், மக்கள் போராட்டத்துக்கு அழைத்தால் வரமாட்டார்கள். ஒன்று தமிழ் கட்சிகள் மீதான கோபம் மற்றையது, அரசாங்கம் எதுவுமே செய்யாது என்ற நிலைபாடு என்பதை அவர் கண்டறிந்த நிலையில் மக்களை சும்மா இருக்கமாறு கோரினால் நிச்சயமாக ஒத்துழைப்பார்கள் என்ற தொனியில் ஹர்த்தாலை முன்னெடுக்கலாம் என்று திட்டத்தை தெளிவு படுத்தியிருக்கின்றார்.

இதற்கு, ஏனைய தலைவர்களும் ஆமோதிக்க, ஹர்த்தாலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. இதில் கிழக்கினையும் இணைப்பதாக இருந்தால் முஸ்லிம்களின் ஆதரவினை கோர வேண்டும் என்றும் அந்தப் பொறுப்பு சுமந்திரனிடமும் வழங்கப்பட்டது. ஈற்றில் முஸ்லிம் தரப்புக்கள் வெள்ளிக்கிழமை என்றால் மட்டும் ஒத்துழைப்பதாக அறிவித்த நிலையில் அதனை ஏற்றுக்கொண்ட தமிழ்க் கட்சிகள் 20ஆம் திகதி ஹர்த்தாலுக்கான அறிவிப்பை வெளியிட்டன.

இதற்குள், யாழ்.வர்த்தகர் சங்கம் மற்றும், ஏனைய தரப்பினரிடத்திலும் ஆதரவு கோரப்பட்டது. சந்தைகள், வியாபார நிலையங்கள் உள்ளிட்டவற்று நேரடியான விஜயங்களை மேற்கொண்ட தலைவர்கள் ஹர்த்தாலுக்கான ஒத்துழைப்புக்களை கோரினார்கள். இந்தச் செயற்பாடு பெரும்பாலும் யாழ்.மாவட்டத்தில் தான் தீவிரமாக நடைபெற்றது.

வடக்கின் ஏனைய மாவட்டங்களிலோ அல்லது கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களிலோ இந்தக் கட்சிகளின் அங்கத்தவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்கவில்லை. அதுபற்றிய எந்தவிதமான திட்டங்களும் வகுக்கப்பட்டதாக கூட இல்லை.

இவ்வாறான நிலையில், அன்றாடம் வருமானம் ஈட்டுபவர்களும், சந்தைகள் மற்றும் வியாபார நிலைய வர்த்தகர்களும், பாடசாலை மாணவர்களும் திண்டாட்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக, அன்றாடம் வருமானம் ஈட்ட முனைபவர்களுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வேறெந்த தெரிவுகளும் இருந்திருக்கவில்லை.

வடக்கு,கிழக்கில் ஐப்பசி மாத வெள்ளிக்கிழமையும், நவராத்திரி பூஜையும் விமர்சையாக பின்பற்றப்படும் நிலையில் சந்தைகள் மூடப்பட்மையால் வர்த்தகர்கள் தமது வருமானத்தை இழந்தனர். பொதுமக்களும் மரக்கறிகள் உள்ளிட்டவற்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைகள் ஏற்பட்டன. அடுத்ததாக பாடசாலை மாணவர்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகினர்.

அவர்கள் பயணங்களை மேற்கொள்வதற்கான போக்குவரத்துக்கள் இயங்கவில்லை. அதுமட்டுமன்றி தற்போது பரீட்சைக்காலம் என்பதால் பரீட்சைகள் குறித்த தினத்தில் நடைபெறுமா இல்லையா என்பது தொடர்பில் எந்தவிதமான முறையான அறிவிப்புக்களும் வெளியிடப்படவில்லை.

ஆளுநர் பிஸ்.எம்.சார்ள்ஸ், செயலாளர் பற்றிக் ரஞ்சன் உள்ளிட்டவர்களிடத்தில் பேச்சுக்களை நடத்தியபோதும், அவர்கள் கல்வி வலய அதிகாரிகளின் தலையிலும், கல்வி வலய அதிகாரிகள் பாடசாலை அதிபர்களின் தலையிலும் விடயங்களை சுமத்திவிட்டு அமைதி காத்தவிட்டனர்.

ஆகக்குறைந்தது ஹர்த்தால் தினத்தன்று நடைபெறும் பாடங்களுக்கான பரீட்சைகள் பிறிதொரு நாளில் நடத்தப்படும் என்ற அறிவிப்பை விடுத்திருந்தால் கூட மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்காது.

ஆனால், மாகாண ஆளுநரும் சரி, அதிகாரிகளும் சரி தாங்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக செயற்படமுடியாது என்பதில் மிகத்தீவிரமாக இருக்கின்றனர் என்பதை அவர்களின் பிரதிபலிப்புக்கள் வெளிப்படுத்தியுள்ளன.

ஆகவே, அவர்களுக்கும் வடக்கு,கிழக்கு தமிழர்களின் தாயகம் தான் என்பதையும், பூர்வீகம் தான் என்பதையும் இங்கே குறிப்பிட்டுக்கூற வேண்டியுள்ள நிலையில் அவர்களின் விடுதலைப் பற்றி கேள்விகள் எழுகின்றன.

இவ்வாறான நிலையில், அரசியல் கட்சிகள் தமது போராட்ட அழைப்புக்கள் மற்றும் மக்களின் பங்கேற்பு பற்றி தீர்க்கமானதொரு தீர்மானத்திற்கு வரவேண்டியது அவசியமானின்றது.

யாழ்.வணிகர் சங்கம், தனியார் போக்குவரத்து சங்கம், வர்த்த நிலைய உரிமையாளர்கள், மதத்தலைவர்கள் உள்ளிட்டவர்களுடன் மட்டும் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொண்டு அறிவிப்புக்களைச்செய்வது மட்டும் எதிர்வரும் காலங்களில் ஹர்த்தால் போன்ற கனதியான போராட்டங்கள் வெற்றிபெறுவதற்கு சந்;தர்ப்பங்களை அளிக்காது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

மக்கள், தமது விடுதலைக்காக குரல்கொடுப்பதற்காகவே மேற்படி அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தொடர்ச்சியாக வாக்களிக்கின்றார்கள். பின்னர், தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தாமே தான் போராடும் நிலைமைகளே காணப்படுகின்றன. போராட்டங்களுக்கான தீர்மானங்களையும், அறிவிப்புக்களையும் மட்டுமே அரசியல் கட்சிகள் செய்கின்றன.

இந்த நிலைமைகளில் முழுமையான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. மக்கள் போராட்டங்களுக்கு முன்னால் அரசியல்வாதிகள் நிற்காது விட்டாலும் ஆகக்குறைந்தது மக்கள் பின்னாலாவது அரசியல்வாதிகள் நிற்க வேண்டும். கிராமத்துக்கு கிராமம் சென்று மக்களுடன் உரையாடல்களை செய்ய வேண்டும்.

போராட்டங்களை முன்னெடுப்பதால் அந்த மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அதற்கான மாற்றுவழிகளை கண்டறிய வேண்டும். இவற்றுக்கு எல்லாம் அப்பால் போராட்ட அறிவிப்புக்களைச் செய்து அறிக்கைகளை விடுத்துவிட்டு கொழும்பில் சென்று தங்கியிருப்பது தவறானதொரு முன்னுதாரணமாகும்.

ஆகவே அரசியல்கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து போராட்டத்தினை அறிவிப்பதாக இருந்தால் நிச்சயமாக அதற்கான ஒழுங்குமுறைகளும், அமைப்புக்களும் மாற்றம் காண வேண்டும். அதற்கு முன்னதாக அரசியல் கட்சிகளும், அரசியல் வாதிகளும் தங்களை சுயபரீசிலனை செய்ய வேண்டும்.

இல்லாது விட்டால் போராட்டங்களின் போக்கு வெறுமனே ஒரிருவருடன் பதாகைகளை தூக்கிப்பிடிக்கும் உப்புச்சப்பற்ற நிலையை நோக்கி விரைவாக நகர்ந்துவிடும். அது, சிறிலங்காவிற்குள்ளும், வெளியிலும், தமிழனித்தையே மலினப்படுத்தும்.




# திலீபன் நினைவுகள்

## திலீபனின் அரசியல் ஆசிரியர் மு.திருநாவுக்கரசு



கடந்த இதழின் தொடர்ச்சி

உரையாடலின் ஒரு கட்டம் இவ்வாறுதான் அமைந்தது. 'சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்ற உனது முடிவை ஏற்க முடியாது. அதற்குப் பதிலாக கட்டம் கட்டமாகவும், அணியணியாகவும் சங்கிலித் தொடர் உண்ணாவிரதங்களை மேற்கொள்ளலாம். ஓர் அணிக்குப்பின் இன்னொரு அணியென மூன்று நாள் இடைவெளியில் கட்டம் கட்டமாக உண்ணாவிரதத்தை மேற்கொள்வதுதான் நல்லது. இப்படிச் சாகும்வரை உண்ணாவிரதம் வேண்டாம். அப்படி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்காது கட்டம் கட்டமாக இருப்பதன் மூலம் மக்களை அதில் பங்கெடுக்கச் செய்யவும், அணிதிரட்டவும் முடியும். இந்திய இராணுவம் நிலைகொண்டுள்ள சூழலில் இத்தகைய தொடர் உண்ணாவிரத போராட்டமுறை பயனளிக்க வல்லது. சாகும்வரை உண்ணாவிரதம் என்பது அடுத்த கட்டமற்ற இன்னொரு பெரும் முடிவுக்குக் கொண்டுபோய் விட்டுவிடும்' என்று கூறிவிட்டு மேலும் தொடர்ந்தேன். (இது உரையாடலின் சாராம்சமே தவிர அப்படியே அதே வார்த்தைப் பிரியோகங்கள் அல்ல.)

அப்போது இலங்கையில் மூன்று பௌத்த நிகாயங்களையும் சேர்ந்த இரண்டு பெரும் பௌத்த பீடங்களையும் உள்ளடக்கிய சுமாராக 13,000 பௌத்த பிக்குகள் இருந்தனர். இதனை திலீபனிடம் சுட்டிக்காட்டி பின்வருமாறு கூறினேன். நிச்சயம் உன்னை சாகவிடுவார்கள். மேற்படி 13,000 பிக்குகளும் இதுபோன்ற ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை தெற்கில் தொடங்கவிடாது தவிர்க்க வேண்டுமென்றால், உன்னைச் சாகவிடவேண்டியது இரண்டு அரசுகளுக்கும் அவசியம். ஆதலால் கண்ணை மூடிக்கொண்டு உன்னை சாகவிடுவார்கள். சாவின் பின்பு நிலைமை அடுத்த கட்டத்திற்கு இடமின்றி பெரிதும் குழம்பும். அதற்குப் பதிலாக தொடர் உண்ணாவிரத முறையே அடுத்த கட்டத்திற்கு நிலைமையை வளர்த்துச் செல்லும். உன்னை இழக்க முடியாது. இந்த முடிவை கைவிடு என்றேன்.

இதனை முதலாவதாக என்னுடன்தான் கதைப்பதாக திலீபன் கூறினான். இனி மேற்தான் மேற்கொண்டு அடுத்த நடவடிக்கை என்றான். அப்படியென்றால் நல்லது, மேற்கொண்டு யாருடனும் கதைக்காமல் இத்துடன் நிறுத்திவிடு என்று பலவாறாக கூறி வற்புறுத்தினேன்.



அவன் கரும்புலி மில்லரை நினைவு கூர்ந்து ஒரு பிரசங்கத்தையே எனக்குச் செய்தான். அதன் சாராம்சம் பின்வருமாறு அமைந்தது. மில்லருக்கு இறுதி விடை கொடுத்து அனுப்பியது தான்தான் என்றும் அவ்வாறு அவனுக்கு தான் இறுதிவிடை கொடுக்கும் தருணத்தில், மில்லர் தன் சட்டைப் பைக்குள் இருந்த பணத்தை எல்லாம் உருவியெடுத்து அதற்கு குளிர்பானம் (CocoCola, Fanta) வாங்கி தன்னுடன் நின்ற ஏனைய போராளிகளுக்கு கொடுக்குமாறு கொடுத்ததாக கூறினான். (அப்போது போராளிகள் மேற்படி குளிர்பானங்களை அருந்துவதில் கட்டுப்பாடுகள் இருந்தன.)

இறுதியாக கரும்புலி மில்லர் தன்னிடமிருந்து இறுதி விடைபெறும்போது மில்லரைப் பார்த்து தான் பின்வருமாறு கூறியதாக என்னிடம் கூறினான்.

அதாவது 'நீ முன்னாலே போ, நான் பின்னாலே வாறேன்'. இவ்வாறு தான் வழியனுப்பி வைத்த பொறுப்புக்கு ஏற்ப தான் போராட்டத்தை இன்னொரு வடிவில் தொடர்வதற்காக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக உறுதிபடக் கூறினான். 'சாவு நிச்சயம்' என்று நான் கூறியதை அவன் ஏற்றுக்கொண்டான். ஆனால் அவன் தன் முடிவில் மாற்றம் செய்ய தயாராக இருக்கவில்லை. அடுத்து அவன் தலைமைப்பீடத்தை நாடப்போவதாக என்னிடம் கூறிவிட்டு புறப்பட்டான்.

இதன் பின்பு நடந்தவற்றை ராஜன் பின்வருமாறு என்னிடம் கூறினான்.

'தலைவர் இதற்குச் சம்மதிக்கமாட்டார்' என்று ராஜன் திலீபனிடம் கூறியபோது அதற்கு திலீபன் பின்வருமாறு பதில் கூறினான். 'எப்படியும் நான் அண்ணையிடம் சம்மதம் பெற்றுவிடுவேன். வா அண்ணையிடம் போவோம்' என்றானாம். பின்பு திலீபனும், ராஜனும் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு மிகவும் அண்மையில் உள்ள அவரது மறைவிடத்திற்குச் சென்றனர். திலீபன் மட்டும் அவரை உள்ளே சென்று சந்தித்தான். ராஜன் வெளியே காவல் நின்றான். சுமாராக ஒரு மணித்தியாலத்திற்கும் மேற்பட்ட உரையாடலின் பின்பு வெளியே வந்த திலீபன் அனுமதி பெற்றுவிட்டதாக ராஜனிடம் கூறினான்.

நான் எனது சோகத்தில் இருந்து சிறிதும் மீளவில்லை. திரு.மாத்தையாவை பல்கலைக்கழகத்திற்கு முன்னால் இருந்த இயக்கத்தின் வெளிப்படையான முகாமின் வாசலில் கண்டேன். இருவரும் கதைக்கத் தொடங்கினோம். வாசலில் வெளியே வந்துகொண்டிருந்த மாத்தையா 'வாங்கோ உள்ளே போய் இருந்து கதைப்போம்' என்றார். சாகும்வரையான உண்ணாவிரத முடிவை கண்டிப்பாக கைவிட வேண்டும் என்றேன். எனது தரப்பு கருத்துக்கள் அனைத்தையும் கூறினேன். திலீபன் மரணம் அடையப் போவது உறுதி என்பதையும் கூறினேன். மாத்தையா தனக்குரிய கருத்துக்களைக் கூறி சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது தவிர்க்க முடியாது என்றார்.

எனக்கு பசிக்க மறுத்தது. தேனீரைத் தவிர வேறு எதனையும் என்னால் உட்கொள்ள முடியவில்லை. கவிஞர் சு. வில்வரத்தினம் நான் இருக்கும் இடத்திற்கு வந்து என்னை பார்க்க வந்தார். 'திரு, என்ன முகம் காய்ந்திருக்கிறது. இன்னும் சாப்பிடவில்லையா' என்று கேட்டார். அவர் எனது மதிப்புக்குரிய நண்பர். அவரை வில்வண்ணை என்றே அழைப்பேன். அவருடன் மனம் திறந்து பேசுவது எனக்கு மன ஆறுதலைத் தரும் என்பது எனக்குத் தெரியும்.

அப்போது திலீபன் உண்ணாவிரதம் இருக்கப் போகும் கதையை சொல்லத் தொடங்கினேன். சாவு நிச்சயம் என்று கூறி அதற்கான காரணத்தையும் கூறினேன். நான் காரணத்தைக் கூறி கட்டாயம் திலீபனைச் சாகவிடுவார்கள் என்று கூறியதும் எனது விளக்கத்தில் நம்பிக்கை கொண்ட கவிஞர், 'ஆமாடா' என்று வட்டார வழக்குச் சொல்லில் கூறியவாறு தன் இரண்டு கண்களையும் மேலே உயர்த்தியவாறு தனது ஒரு கையால் தன் நெஞ்சை அத்தியவாறு 'சுவாமி, தாயில்லாப் பிள்ளை' என்று கூறி தன் ஆத்மீகக் குருவை வணங்கியவாறு சோகத்தில் அமர்ந்தார்.

# இஸ்ரேலின் மிலேச்சத்தனத்துக்கு சர்வதேசத்தின் பக்கத்துணை

**பூலோகன்**

ஜனநாயகம், சமத்துவம் போன்ற வார்த்தைகளை அதிகளவில் பற்றிப்பிடித்திருக்கும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்தின் கோரமுகம் பஸ்தீன விடுதலையில் தொடர்ச்சியாக அம்பலப்பட்டே வந்திருக்கின்றது.

இந்த நிலைமைகள் தொடர்ந்திருந்தாலும், இப்போது இஸ்ரேலின் மிலேச்சனமான தாக்குதல்கள் தீவிரமடைந்திருக்கின்ற நிலையிலும், மேற்படி சக்திகள் அதற்கு பக்கத்துணையாக இருந்து வருகின்றமையானது, உலக ஒழுங்கில் சமநிலைத் தன்மை வெளிப்படுத்தி நிற்கின்றது. இதுவொரு வேடிக்கையானதும் கூட.

ஒக்டோபர் 7ஆம் திகதியன்று, ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலுக்கு எதிராக 20 நிமிடங்களில் குறைந்தது 3,000 ஏவுகணைகளை ஏவியது. இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் தரை மற்றும் வான் வழியான ஆக்கிரமிப்பை ஆரம்பித்தது.

கமாஸ் போராளிகள் காஸாஇஸ்ரேல் தடையை உடைத்து, காஸா எல்லை வழியாக வலுக்கட்டாயமாக நுழைந்தனர், இஸ்ரேலிய சமூகங்கள் மற்றும் இராணுவ நிலைகளுக்குள் நுழைந்து தாக்கியதுடன், இந்த செயற்பாட்டில் குறைந்தது ஆயிரம் இஸ்ரேலியர்களைக் கொன்றனர்.

பிரச்சினை ஆரம்பமான அன்றைய தினம் காஸா எல்லையில் இருந்து வெறும் 2 கிலோ மீற்றர் தொலைவுக்குள் உள்ள கிப்புட்ஸ் நகரில் ஆயிரக்கணக்கானவர்கள் பாரிய இசை நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தனர்.

காஸா எல்லைக்குள் இருந்து பராகிளைடர்கள் மூலம் வான் வழியாகவும், தரைவழியாகவும் ஊடுருவிய ஹமாஸ் இயக்கத்தினர் இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த இடத்தில் நடத்திய தாக்குதல்களில் மட்டும், 270 பேர் உயிரிழந்தனர்.

இந்த நகரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஹமாஸ் அமைப்பினர் நூற்றுக்கும் அதிகமானோரை பணயக் கைதிகளாக கொண்டு சென்றிருக்கிறார்கள். அங்கிருந்த வீடுகளை எரித்த போது, நிலவறைகளுக்குள் தஞ்சமடைந்திருந்த 100 இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கிறார்கள்.

ஹமாஸ் அமைப்பு குறிப்பிட்ட நேரத்துக்குள் ஆயிரக்கணக்கான ரொக்கட்டுகளை ஏவியது மாத்திரமல்ல, இஸ்ரேலிய எல்லைகளை ஊடறுத்தும், நகரங்களுக்குள் நுழைந்தும் தாக்குதல்களை நடத்தியிருக்கிறது. மிக நன்றாக திட்டமிட்டு, தரை, கடல், வான் வழியாக ஒருங்கிணைத்து முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் இது.

இஸ்ரேல் படைகளுக்கும் ஹமாஸக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக ஆதரவு இருந்தாலும், ஜோர்தான், எகிப்து, சிரியா, லெபனான், பலஸ்தீனம் என்று ஐந்து அரபு நாடுகளுக்கு நடுவே, 10 மில்லியனை விடவும் குறைந்த யூதர்களை கொண்ட இஸ்ரேல், 75 ஆண்டுகளாக தப்பிப் பிழைத்திருக்கிறது என்றால் அதற்கு ஒரே காரணம், அதன் படைபலமும், இராணுவ உத்திகளும் தான். இஸ்ரேலிய பாதுகாப்பு படைகள் மற்றும் மொசாட் அளவிற்கு விட உலகில் வேறெந்த கட்டமைப்பும் நற்பெயரை உயர்ந்ததாக கொண்டிருக்கவில்லை. ஆனால் தற்போது அந்த நற்பெயர் இழக்கப்பட்டுள்ளது.

பல தசாப்தங்களாக, இஸ்ரேலின் மேற்படி இரண்டு கட்டமைப்பும் வினைத்திறனுக்கான நற்பெயரைக் கட்டியெழுப்பியுள்ளதுடன், அவர்களின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக உயர்ந்த அளவில் போற்றப்படுகின்றன.

இதனால் தான் ஹமாஸின் கட்டுப்பாட்டில் உள்ள காஸா எல்லையில் இருந்து மிக குறுகிய தூரத்துக்குள் இஸ்ரேலியர்கள் தமது பாதுகாப்பு உறுதியானது என்ற உணர்வுடன் இருந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிட்டுக் கூற வேண்டியதாக உள்ளது.

முன்னதாக, இஸ்ரேல் மீது அரபுலக நாடுகள் தங்களின் பெரும் படைபலத்தைக் கொண்டு நடத்திய போர்கள், எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தின. கடைசியில் தங்களின் நிலப்பரப்புகளையும் இஸ்ரேலிடம் கொடுத்து விட்டு ஓடும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

குறைந்த படைபலத்தைக் கொண்டிருந்தாலும், இஸ்ரேலியப் படைகளின் போர்த்தந்திரங்களும், நவீன போராயுதங்களும், அவர்களின் மனோதிடமும் தான், கடந்த 75ஆண்டுகளாக இஸ்ரேலியர்களை இவ்வாறானதொரு மரண பயம் இல்லாமல் வாழ வைத்திருந்தது.

எகிப்து, லெபனான், சிரியா, ஜோர் தான் போன்ற நாடுகளிடம் இருந்தும், பலஸ்தீனர்களிடம் இருந்தும் கைப்பற்றிய நிலப்பரப்புகளில் யூதர்கள் நம்பிக்கையுடன் குடியேறி நிலைகொண்டதற்கு முக்கியமான காரணம் இஸ்ரேலின் நுட்பமான இராணுவ, குடியேற்றவாத கொள்கை தான்.

பலஸ்தீனர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலங்களில் யூத குடியேற்றங்கள் நிறுவப்பட்டு, பலஸ்தீனர்களுக்கு எதிராக தனது நாட்டு மக்களைக் கொண்டு ஒரு கவசத்தை உருவாக்கியிருந்தது இஸ்ரேல். இராணுவமும், மொஸாட்டும் தான் பக்கத்துணையாக இருந்தன.

அவ்வாறான நிலையில் அத்தகைய கட்டமைப்புக்களை உடைத்தெறிந்து ஹமாஸ் நடத்திய தாக்குதலின் வெற்றி, மற்றும் மேற்படி கட்டமைப்புக்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகள் அனைத்திலிருந்தும் ஹமாஸை வெளியேற்ற முடியாத நிலைமைகள் அவதானத்துக்கு உட்பட்டுள்ளன.

குறிப்பாக, சமீபத்திய மோதலில் உயிரிழந்த இஸ்ரேலியர்களின் எண்ணிக்கையை, மொத்த குடித்தொகையின் விகிதாசாரமாக எடுத்துக் கொண்டால், 9/11 அன்று அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல்களை விடவும் அதிகமாக உள்ளது. 2000 மற்றும் 2005 க்கு இடையில் 1,000 க்கும் மேற்பட்ட இறப்புகளுடன், அதாவது ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக, பலஸ்தீனத்தின் இரண்டாவது எழுச்சியின் போது அதிகமான இஸ்ரேலியர்கள் இறந்தனர், தற்போதைய எண்ணிக்கை வெறும் 24 மணிநேர சண்டையில் அவற்றையெல்லாம் விடவும் அதிகரித்துள்ளது.

1967இல் எகிப்து, ஜோர்டான் மற்றும் சிரியாவுக்கு எதிரான போரின் போது, முக்கியமாக இராணுவ வீரர்களிடையே இஸ்ரேல் 700பேரின் இறப்பை மட்டுமே எதிர்கொண்டது. ஆனால் சினங்கொண்டுள்ள இஸ்ரேலின் கண்மூடித்தனமான பதிலளிப்பு அப்பாவிப் பொதுமக்கள் உட்பட ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்களின் அவலக்குரல்களுக்கு காரணமாகியுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, இந்த நிலைமையானது தொடருகின்ற நிலையில், காஸாவில் இஸ்ரேலிய நடவடிக்கைகள் வரும் நாட்களில் தொடரும் என்பதால், உயிரிழப்புக்களின் எண்ணிக்கை கணிசமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இஸ்ரேல் என்றொரு நாடு வரலாறு நெடுகிலும் காணப்பட்டிருக்கவில்லை. 1948 மே மாதம் இஸ்ரேல் என்றொரு நாடு பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கு ஐ.நா. அங்கீகாரம் வழங்கியது. ஆனால், அதே யாண்டு செப்டெம்பர் 22 இல் அனைத்துப் பலஸ்தீன அரசை பலஸ்தீன முஸ்லிம்கள் நிறுவிய போது, அதனை 6 முஸ்லிம் நாடுகள் அங்கீகரித்த போது, அதனை ஐ.நா.வோ மேற்குலகமோ முழு மனதுடன் அங்கீகரிக்கவில்லை. ஏனெனில் அது அவர்களது மறைமுக திட்டத்திற்கு சவாலாக இருந்தது.

பலஸ்தீனம் என்ற நாட்டின் ஒரு பகுதியில் உருவாக்கப்பட்ட இஸ்ரேலுக்கு ஐ.நா.வில் அப்போதே தனிநாடு அந்தஸ்து வழங்கப்பட்டது. ஆனால், 193 உறுப்பு நாடுகளில் 138 நாடுகள் ஆதரவளித்த போதும் அந்த அந்தஸ்து இஸ்ரேலை விட மூத்த நாடான பலஸ்தீனத்திற்கு இதுவரை கிடைக்ககவில்லை. ஐ.நா.வில் பார்வையாளர் அந்தஸ்தே 2012இல் வழங்கப்பட்டது.

ஆக, நாடோடிகளான யூதர்களுக்கு அடைக்கலம் கொடுத்த பலஸ்தீன மக்களின் நிலத்தில் இஸ்ரேல் என்ற நாடு உருவாகியது மட்டுமன்றி, பலஸ்தீன மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளையும் அமெரிக்காவின் உதவியுடன் இஸ்ரேல் தொடங்கியது. அப்போதுதான் பலஸ்தீன முஸ்லிம்கள் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான இந்த போராட்டத்தை ஆரம்பித்தனர் என்பது தான் சரித்திரமாகும்.

ஆனால், தற்போது வரையில் பஸ்தீன போராட்டத்துக்கு சர்வதேசம் அங்கீகாரத்தை அளிக்கவில்லை. ஐ.நாவில் இஸ்ரேலின் மீலேச்சத்தனதுக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இஸ்ரேலில் அதனை பொருட்டாக கொண்டதில்லை.

அல்அக்ஸா பள்ளிவாசல் உள்ளிட்ட பலஸ்தீனர்களின் பூர்வீகமான பகுதிகள் இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதோடு அடையாளங்களை அழித்தொழித்தும் வருகின்றமையானது உலகறிந்த விடயமாகும். இந்த விடயங்களைக் கூட கண்டிக்கும் அளவிற்கு சர்வதேச நாடுகள் தற்துணிவைக் கொண்டிருக்கவில்லை.

இந்த நிலையில் தற்போது ஆரம்பமாகியுள்ள போர் கமாஸை முழுமையாக வெற்றி கொள்ளும் வரையில் முன்னெடுப்பதையே இஸ்ரேலும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளும் விரும்புகின்றன. குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதி பைடன், இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் ஆகியோரின் பதற்றங்களுக்கு மத்தியிலான இஸ்ரேலிய விஜயங்கள் தீவிரவாத இயக்கமான கமாஸ் என்ற விழிப்புக்கள் எல்லாம் அவற்றின் நோக்கத்தை புடம்போட்டுக்காண்பிக்கின்றன.

இதற்குள் இஸ்ரேல் வான்வழியாக வெள்ளைப் பொஸ்பேற் குண்டுகளைப் பொழியும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. காஸா பள்ளத்தாக்கில் உள்ள அனைவரையும் கமாஸ் போராளிகள் அல்லது அவர்களுக்கு ஆதரவானவர்கள் என்ற முத்திரையை குத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்குள் காசாமீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்ந்தால் வேறு போர்முனைகளில் மோதல்கள் வெடிக்கலாம் ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஹு_சைன் அப்டொலாகியன் விடுத்துள்ள அறிவிப்பும், ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி, சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் நடத்திய அவசர சந்திப்பும் முக்கியமானதாகின்றது.

மறுபக்கத்தில், காஸா பகுதியில் அனைத்து நுழைவாயில்களும் மூடப்பட்டு விட்டன. இதனால் காஸா நகரில் உள்ள மக்களால் அப்பகுதியைவிட்டு வெளியேற முடியவில்லை. எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படாமல் குண்டுகள் வீசப்படுகின்றன. இதனால் அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள் இடிபாடுகளில் சிக்கி இறக்கின்றனர்.

காஸா பகுதியில் உள்ள மிகப் பெரிய மருத்துவமனை அல்ஷிபாவில் ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் அதிதீவிர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாக காத்திருக்கின்றார்கள். மின்பிறப்பாக்கிகள் இயங்க முடியாத நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. மின்சாரம், குடிநீர் என்பன நிறுத்தப்பட்டுள்ளன.

ஆக, இஸ்ரேல்பலஸ்தீன மோதலானது 21ஆம் நூற்றாண்டின் மற்றுமொரு மனிதாபிமான அவலத்தையும், போர்க்குற்றங்களின் கூடாரமாகவும் மாறியுள்ளது. இதுவொரு வரலாற்றுத் தவறாகும்.
























நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை தியாக தீபம் திலீபன் நினைவாக ஆனந்தபுரம், ஊற்றுப்புலம், பாரதிபுலம் மற்றும் கட்டப்பிரய் ஆகிய இடங்களை சேர்ந்த வாழ்வதார உதவி தேவைப்படுவோருக்கு தொழில் முதலீடு மற்றும் பணம் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்க மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குல சேகரத்தின் ஏற்பாட்டில் Mr. Gam Hewage Vidura Vishwanath , Mr. Iguruhena Janaka Hemantha Thalawaththaghe , Miss. Igurahenage Amodya Ilmi Thalawaththage ஆகியோரின் கூட்டிணைந்த ரூபாய் 4 இலட்சத்து 5 ஆயிரம் நிதிப்பங்களிப்பில் மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

அந்தவகையில் ரவீந்திரராசா பேபி அவர்களுக்கு கோழி வளர்ப்பிற்காகவும், சந்திரகுமாரி இந்திராணி என்பவருக்கு தோட்டம் செய்வதற்காகவும் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதுடன் கிருஸ்ண சாமி கிருஸ்ண குமார் என்பவருக்கு விவசாயத்திற்கு தேவையான நீர் இறைக்கும் இயந்திரம் 65 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலும் பாடசாலை மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி 42 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலும் வழங்கி வைப்பட்டன. மேலும் மாவிரர் குடும்பங்கள் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 20 குடும்பங்களிற்கு அத்தி யவசிய பொருட்கள் அடங்கிய உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.